விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 17 வெள்ளிக்கிழமை (01.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 072

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-5620)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

### நெடுங்கேணியில் கைக்குண்டு மீட்பு



24

### காணாமல் போனோர் விபரம்
#### ஆளுநரிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் யாழ்ப்பாணம் சங்கத்தினர், வடமாகாண ஆளுநரை கடந்த வாரம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன் போது ஆளுநர் சுரேன் ராகவன் 23

#### தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவே
# தமிழீழ விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தினர்
### பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவிப்பு



(இஸ்லாமபாத்)
விரக்தி மற்றும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளினால் ஏற்பட்ட கோபம் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் தற்கொலை தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் மதம் சார்ந்து அவர்கள் தாக்குதல்களை நடத்தவில்லை எனவும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.
(24ஆம் பக்கம் பார்க்க)

#### 42 இலட்சம் ரூபாய் பெறுமதியான
### கேரளகஞ்சா பொதியுடன் மன்னாரில் ஒருவர் கைது



(மன்னார்)
மன்னாரில் 42 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாப் பொதிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை மன்னார் - தலை மன்னார் பிரதான வீதி ஓலைத் தொடுவாய்பகுதியில் மேற்கொண்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கை 24

#### பல்வேறு கட்சித் தலைவர்களுடன்
### அரசியல் யாப்பு தொடர்பில் ஜனாதிபதி பேச்சுவார்த்தை

(கொழும்பு)
புதிய அரசியல் யாப்பு தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த பேச்சுவார்தையில் 23

### வடக்கில் தமிழ் பொலிஸை இணைக்க நடவடிக்கை
#### வடக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன்

(யாழ்ப்பாணம்)
வடக்கில் அதிகரிக்கும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த 850 தமிழ்ப் பொலிஸார் புதிதாக இணைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச்கர் கணேசநாதன் தெரிவித்தார். யாழ். மாவட்டச் செயலகத்தில் 24

### அரசியல் தீர்வொன்றே நாட்டை ஒன்றிணைக்க முடியும் - ரணில்

(கொழும்பு)
பிளவடைந்த நாட்டை ஒன்றிணைப்பது இலகுவான காரியமல்ல. அரசியல் தீர்வொன்றுடனேயே அதனை செய்ய முடியும். எனினும் அதேவேளை அது சவால் மிக்கதுமாகும் என பிரத 23

### அரசு செய்தது பெரிய தவறு
#### அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)
இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த யோசனைக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியது மிகப் பெரிய அரசி 23

### ஒரே வரிசையில் அரசியல் எதிரிகள்



03

### சுமந்திரன் உள்ளிட்ட 5 எம்.பிக்களின் சொத்துவிபரம் வெளியிடப்பட்டது

(கொழும்பு)
ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை பகிரங்கமாக வெளிப் 23

### இந்திய விமானி அபிநந்தன் இன்று விடுவிக்கப்படுவார்
#### பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் பிரதமர் இம்ரான்கான் அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)
இந்திய விமானப்படையின் விங் கமாண்டர் அபிநந்தன் இன்று விடுவிக்கப்படுவார் என்று பாகிஸ்தான் 24

#### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்
### உறவுகளுக்காக தற்போதும் காத்துக்கொண்டிருக்கின்றனர்
#### அமெரிக்க தூதுவர் சமந்தாபவர்

(கொழும்பு)
காணாமல்போனோர் அலுவலகத்தின் [illegible] ணக்க செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் காணாமல் போனோரின் உறவினர் 23

### திடீர் வயிற்றோட்டம் 7 மாத குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
திடீர் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டு 7 மாத குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.
24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்கொலைகளைத் தடுப்போம்!

**உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?**

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.
அடுத்த பயிற்சி நெறி மிக விரைவில்.

உடனே அழையுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அண்மையில்)
**077 900 8776** ((மு.ப. 9.00 - பி.ப. 1.00)

(7691)


## காரைநகர் நட்சத்திர விடுதி தொடர்பான வழக்கு இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலைச் சந்தியில் உல்லாச நட்சத்திர விடுதியும் மதுபானசாலையும் அமைப்பதற்கெதிராக காரைநகர் பிரதேச பிராந்திய சுகாதார வைத்திய பணிமனை அதிகாரி ப.நந்தகுமாரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

காரைநகர் வலந்தலைச் சந்தியில் உல்லாச நட்சத்திர விடுதியும் மதுபானசாலையும் அமைப்பதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் ஏற்கெனவே இடைக்கால தடையுத்தரவு விதிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கு மீண்டும் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்

## ஸ்தாபகதின நிகழ்வு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : இன்று (01.03.2019) வெள்ளிக்கிழமை
நேரம் : பிற்பகல் 5.00 மணி

நிகழ்ச்சிகள்
நாட்டியாஞ்சலி
நெறியாழ்கை:- ஸ்ரீமதி. ஸ்ரீதேவி கண்ணதாசன் அவர்கள்



**சிறப்புப் பட்டிமண்டபம்**
"யாழ் மண்ணின் பெருமைக்கு பெரிதும் காரணம்"
படிப்பே! பண்பாடே! பக்தியே!
நடுவர்
கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்

குறிப்பு: நிகழ்விற்கான போக்குவரத்துச் சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து (இல.428,K.K.S வீதி, யாழ்ப்பாணம், வண்ணை சிவன் கோவில் அருகாமை) பி.ப 4.45 மணிக்கு ஆரம்பமாகும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.
(அ-5628)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
**கார்த்திகாஜனி துரைராசா**
(B.Com (2nd Upper), PGDE, NDT)
(இலங்கை கணக்காளர் சேவை தரம் III)

எமது கல்வி வலயத்தில் விசேட கல்வி ஆசிரியையாக கடமையாற்றி இன்று கணக்காளர் சேவை தரம் IIIக்கு பதவியுயர்வு பெற்று செல்லும் செல்வி. கார்த்திகாஜனி துரைராசா அவர்களை எமது கல்வி வலய விசேட கல்விப் பிரிவு சார்பாக மனமார வாழ்த்துவதுடன் மேன்மேலும் பதவியுயர்வுகளைப் பெற்று சேவையாற்றிட வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:* யாழ் கல்வி வலய விசேட கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், ஆசிரிய நண்பர்கள்.
(7694)



## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி மாதுகி சஜி**
(ஆசிரியை- கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்)

எமது பாடசாலையில் 04.07.2016 முதல் கணித பாட ஆசிரியராக பணியேற்று தன்னலமற்ற சேவையினால் அதிபர், ஆசிரியர், மாணவர்களின் மனங்களில் இடம்பிடித்து 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து 05.03.2019 முதல் அப்பதவியில் சேவையாற்றச் செல்லும் திருமதி மாதுகி சஜி அவர்களை மேலும் பல பதவி உயர்வு கண்டு பெருமையுடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம். *வாழ்க வளமுடன்...*

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/திருவையாறு மகா வித்தியாலயம், கிளிநொச்சி.
(அ-5653)



## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 08 . 03 . 1926



உதிர்வு 24 . 02 . 2019

அமரர்
**வைத்திய நிபுணர் திரு. சிவசம்பு பத்மநாதன்**
(இளைப்பாறிய நோய்க்கூற்று ஆய்வாளர், யாழ் போதனா வைத்தியசாலை)

ஏழாலை மண்ணிலே உருவாகி திருநெல்வேலியிலே நிலையாகி
நோயியலை ஆய்கின்ற நாயகனாய் பணி செய்தீர்!
கிளிமொழியாலே வித்தகராய் ஆக்கிவிட்ட
பத்மநாத தீபமே! காலமெனும் சுழிக்காற்றில்
கரைந்தே போனீரோ? எம் சுவாசக் காற்றாக
என்றென்றும் வாழ வைப்பீர்!
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்!

"யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர்களின் அவையம்"



## கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்
கரணவாய் கிழக்கு, கரவெட்டி நடத்தும்

## பாரம்பரிய விளையாட்டு விழா - 2019

இடம் : நிலைய முன்றல்
காலம் : 03.03.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.30 மணி

தலைவர்
**திரு.கணேசன் திருமாலழகன்**

பிரதம விருந்தினர்
**திரு.சின்னமணி ஸ்ரீதரன்**
(பண்ணை முகாமையாளர், அரச விதை உற்பத்திப் பண்ணை, பரந்தன்)

சிறப்பு விருந்தினர்கள்
**திரு.வேலுப்பிள்ளை பாஸ்கரன் (J.P)**
(திடீர் மரண விசாரணை அதிகாரி, முகாமையாளர் செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம்)
**திரு.பாலகிருஷ்ணன் முகுந்தன்**
(மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்கள்
**திரு.சபாரட்ணம் நகுலேஸ்வரன்**
(கணக்காளர், கொழும்பு).
**திரு.நவரட்ணம் கிருஸ்ணகுமார்**
(அதிபர், யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)
**திரு.குணரத்தினம் விநாயகதாசன்**
(உரிமையாளர்- K.V Thash, Electrical & Plumbing Works)
**திரு.கணேசன் சுதர்சன்**
(உரிமையாளர்- Yarl Bike Zone)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம*

நிர்வாகத்தினர், கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம்



(பத்தரமுல்ல)

பத்தரமுல்லயில் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரிய சங்கத்தினர் மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

பத்தரமுல்ல, பெலவத்தையில் அமைந்துள்ள கல்வி அமைச்சிற்கு முன்னால் நேற்று சம்பள உயர்வு மற்றும் பல கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## எதிரெதிர் துருவங்களாக இருந்த

# இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்த நிலையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லமுடியும்

## மைத்திரி-மகிந்த-ரணில் முன்னிலையில் சந்திரிகா நம்பிக்கை



(கொழும்பு)

நாட்டின் ஆளுந்தரப்பு உறுப்பினர் ஒருவர் எதிர்த்தரப்பு உறுப்பினரை பொது மேடை ஒன்றில் பெருமையான விதத்தில் பேசுகின்ற கலாசாரம் கடந்த காலங்களில் இருக்கவில்லை.

எனினும் நாட்டில் எதிரெதிர் துருவங்களாக இருந்த முக்கிய இரு கட்சிகளை இணைய வைத்ததன் ஊடாக கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அத்தகையதொரு கலாசாரத்தை நாங்கள் உருவாக்கினோம்.

அந்நிலையில் மாறுதல் ஏற்படுவது கவலையளிக்கின்ற அதேவேளை, இரு கட்சிகள்ஒன்றிணைந்தநிலையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையும் எனக்குள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் 40 வருட அரசியல் பயணம் மற்றும் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்துவந்துள்ளமை ஆகியவற்றை முன்னிட்டு நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# எதிரும் புதிருமான அரசியல் தலைவர்கள் ஒரே வரிசையில்

(கொழும்பு)

எதிரும் புதிருமான அரசியல் தலைவர்கள், நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் ஒன்றாகப் பங்கேற்றிருந்தனர்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில்நேற்று முன்தினம் மாலை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றனர்.

மைத்திரிபால சிறிசேனவும் சந்திரிகாவும் அண்மைக் காலமாக சந்தித்துக் கொள்வதை தவிர்த்து வருகின்றனர்.



மகிந்த ராஜபக்ஷவை சந்திரிகா கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

இவர்கள் அனைவரும் ஒரே வரிசையில் நேற்று முன் தினம் நிகழ்வில் அமர்ந்திருந்தனர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி 2015 ஜனாதிபதித் தேர்தலில் ஜோன் அமரதுங்கவின் பங்களிப்பை தன்னால் மறக்க முடியாது என்று தெரிவித்தார்.

அத்துடன், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவர் என்பதால் தான், அவரால் நீண்ட காலம் அரசியலில் நிலைத்திருக்க முடிகிறது என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் வருடமொன்றுக்கு 900 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

## அனர்த்தத்துறை அமைச்சர் ரஞ்சித் தகவல்



(கொழும்பு)

இலங்கையில் வருடமொன்றுக்கு சுமார் 900 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பதாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்நாட்டு அனர்த்த தவிர்ப்பு தொடர்பிலான கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதியளவு விழிப்புணர்வு இன்மையே இவ்வாறான மரணங்கள் அதிகளவில் சம்பவிப்பதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நதிகள், குளங்கள், ஆழமான நீர்நிலைகள் உள்ளிட்டவை தொடர்பில் போதியளவு தெளிவின்மை காரணமாக சிலர் இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழக்க நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதி விபத்துக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுடன் ஒப்பீடு செய்யும் போது நீரில் மூழ்குதல் தொடர்பில் உரிய விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# அட்மிரல் வசந்த கரன்னகொடவின் அடிப்படை உரிமை மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று வியாழக்கிழமை மூன்று நீதிபதிகளை கொண்ட அமர்வில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது, விசாரணையை ஒத்திவைப்பதாக நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.



முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் அவரது சட்டத்தரணியால் கடந்த திங்கட்கிழமை அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட வழக்கில் தொடர்புடையதாக, முன்னாள் கடற்படைத் தளபதி மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

11 தமிழ் இளைஞர்களை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியமை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்காவின் மிலேனியம் ஒத்துழைப்பு இலங்கைக்கு மீளக் கிடைத்துள்ளது

## நிதியமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையால், இடைநிறுத்தி வைக்கப்பட்ட வெளிநாட்டு இராணுவ நிதி ஒதுக்கீட்டையும் மிலேனியம் சவால் கூட்டுறவு திட்டத்தையும் அமெரிக்கா மீள அனுமதித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. அமெரிக்க குழுவொன்று அடுத்த மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள உள்ளது.

இந்தக் குழுவுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளில், குறித்த சலுகைகளை இலங்கைக்கு மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை கொண்டிருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், மிலேனியம் சவால் திட்டத்தின் ஊடாக, காணி மற்றும் போக்குவரத்துத்துறைகளின் திட்டங்களுக்காக இலங்கை எதிர்காலத்தில் மானியங்களைப் பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலே நாட்டிற்குப் பிரதானம்

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

(புலத்சிங்கள)

முதலாவதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே நாட்டுக்குப் பிரதானமானது என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

புலத்சிங்ஹள வாராந்த சந்தைத் தொகுதியை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு பலம்மிக்க வேட்பாளர் ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் முன்னிறுத்த தேசிய ஜனநாயக கூட்டணி தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு தேவையானது பலமானது சக்தி மிக்க அரசாங்கமாகும். மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மூலம் நாட்டில் பலமான அரசாங்கம் உருவாகுவதில்லை.

எனவே, நாட்டில் தற்போதைய தேவை ஜனாதிபதித் தேர்தலே ஆகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-7590)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)


றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



# யாழ்.மரியன்னை பேராலயம்

## சேமக்காலை தொடர்பான முக்கியமானதும் இறுதியுமான அறிவித்தல்

யாழ்.புனித மரியன்னை சேமக்காலையிலுள்ள (புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை) பல கல்லறைகள் கவனிப்பாரற்ற நிலையிலும், சிதைந்த நிலையிலும் உள்ளன, நீண்ட காலங்களாக இக்கல்லறைகள் தொடர்பாக ஆலயங்களில் தொடர்ச்சியான அறிவித்தல் வழங்கப்பட்டும் கல்லறை உரிமையாளர்கள் இது தொடர்பாக எது விதமான கரிசனையும் செலுத்தவில்லை.

எனவே இக்கல்லறைகளின் உரிமையாளர்கள் அல்லது அவர்களின் பின் உரித்தாளர்கள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ இருப்பின் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட ஒரு மாத கால எல்லைக்குள், இக்கல்லறைகளை உரிய முறையில் பொறுப்பேற்றுப் பராமரிக்கவும் அவற்றை சீரமைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இது தவறும் பட்சத்தில் இக்கல்லறைகள் உரிமையாளரற்ற, பராமரிப்பற்ற கல்லறைகளாகக் கணிக்கப்பட்டு இக்கல்லறைகளைப் பேராலயமானது கையகப்படுத்த உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களுக்குப் பேராலயப் பங்குப் பணிமனையில் ஞாயிறு, கடன் திருநாட்கள், போயா தினம் மற்றும் பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரையும் பிற்பகல் 3.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரையும் பங்குத்தந்தையை அல்லது அலுவலகப் பணியாளர்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

தொடர்பு இலக்கம்
021 222 2457

(7699)

அருட்தந்தை R.C.X நேசராஜா
புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## விளையாட்டு விருதுகள் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 03.03.2019 (ஞாயிற்றுக்கிழமை) அன்று பி.ப 4.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர். இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2017ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அணிகளை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களை அன்று பி.ப 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கிற்கு தவறாது வருகை தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C-5644)



# பூநகரி சோபாலப்பிட்டி

## ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹாசாந்தி வைபவமும் அபிஷேக ஆராதனை நிகழ்வும்

போர்க்கால செயற்பாட்டினால் சிதைவடைந்த எமது பிரதேசத்தை புனிதமாக்கும் நோக்குடனும் மக்கள் நலன் வேண்டியும் இவ் நிகழ்வு நடைபெற இறைவன் அருள் பாலித்துள்ளார்.

இந்நிகழ்வு எதிர்வரும் பங்குனித் திங்கள் நாளை 2ம் திகதி பிற்பகல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் விசேட அபிஷேகமும் ஆராதனையும் மகேஸ்வர பூஜையும் இடம் பெறும்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பித்து விநாயகப் பெருமானின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூநகரி சோபாலப்பிட்டி
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினர்

(C-5650)

# மரண அறிவித்தல்

பிறப்பு
01 - 04 - 1948



இறப்பு
26 - 02 - 2019

## திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் கடந்த 26.02.2019 அன்று காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் வேதநாயகம், கிரகலப்பிரதாபன், ரவீந்திரராசா, ஜெயமலர், ஜெயக்குமாரி (கனடா), ஜெயமாலா, விக்ரர் (புதுக்குடியிருப்பு), ஜெயந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற துர்ராசிங்கம் இரத்தினசிங்கம், பிரபாகரன், வதனேஸ்வரி, அன்னலட்சுமி, கௌசி (கனடா), சிவனேஸ்வரன் (லண்டன்), பிரியதர்சன் (பிரான்ஸ்), மலர் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5649)

7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 97 சதவீதம் மத்திய அரசிடம்

# கையேந்தி நிற்கும் வடக்கு மாகாணம்

### ஆளுநர் ராகவன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

97 சதவீதம் மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுவதாக வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கி ழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தின் வரவு-செலவு 26 பில்லியனைத் தாண்டுகின்ற அதே வேளையில் எங்களுடைய உற்பத்தி 700மில்லியனை விடக் குறைவாகக் காணப்படுகிறது. இது வரவு-செலவின் மூன்று சதவீதமாக எங்கள் உற்பத்தி உள்ளது. இதனால் வடக்கு மாகாணம் 97 சதவீதம் மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படுகிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் இலங்கையினுடைய மொத்த வருமானத்தையும் கொடுக்கக் கூடிய மாகாணமாக வடக்கு மாகாணம் மாறும் சாத்தியமுள்ளது. வடக்கில் காணி, நீர், கடல் என அனைத்து வளங்களும் உள்ளன. கிளிநொச்சி மாவட்டம் ஆசியாவிற்கே உணவு போடக்கூடிய இடமாக மாறக்கூடும். வடக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களுக்கு மானியம் கொடுக்கும் மாகாணமாக மாற வேண்டும். இந்தக் கனவு நனவாக வேண்டும். இந்தியாவின் தமிழ்நாடு எம்.ஜீ.ஆர். எடுத்த முயற்சியாலும், அதன் பின்னர் வந்த அரசியல்வாதிகளின் செயற்பாடுகளாலும் இன்று இரண்டாவது மாறிலமாக உருவெடுத்துள்ளது. எங்களுக்கும் அப்படிப்பட்ட அரசியல்தலைவர்கள்வேண்டும். அரசியல் யுக்திகள் அறிந்தவர்கள் வேண்டும். நாம் எமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதன் ஊடாக அரசியல் சுதந்திரத்தைப் பெற முடியும். பொருளாதார ரீதியாக முன்னேறாத எந்த இனமும் அரசியல் சுதந்திரத்தைப் பெற முடியாது. பிரியக் கூடாத, பிரிக்க முடியாத சிங்கள சகோதரர்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது. உண்மையான வீரம் என்பது விழுந்த பின்னரும் மீண்டும் எழும்புவது தான். அது விளையாட்டில் மாத்திரமே சாத்தியமாகின்றது. எங்கள் தேசம் அபிமானமான தேசமாக உயர்வு காண வேண்டும். அதற்கு எல்லோரும் என்னோடு கைகோருங்கள் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## கொக்கெய்ன் பயன்படுத்தும் அமைச்சர்கள்

# இராஜாங்க அமைச்சர் ரஞ்சனின் கருத்து பிரசாரத்தை அடிப்படையாகக் கொண்டது

### அமைச்சர் மத்தும பண்டார காட்டம்

(கொழும்பு)

அமைச்சர்கள் கொக்கெய்ன் பயன்படுத்துவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்த கருத்து, பிரசாரத்தை அடிப்படையாகக்கொண்டது என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த அவர், ரஞ்சனின் தகவல் ஒரு அமைச்சருக்குரிய தகவல் அல்ல என்றும் அமைச்சர் மத்தும பண்டார தெரிவித்தார்.

குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் ரஞ்சன் ராமநாயக்க ஏன் அதனை நேரடியாக அதிகாரிகளிடம் கூற முடியாது.

இதனை விடுத்து அவர் பிரசாரத்துக்காக அறிக்கைகளை விடக்கூடாது என்றும் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் மகன்மார் கொக்கெய்ன் பயன்படுத்துவதாக ரஞ்சன் கூறியிருப்பதுவும் பிரசாரத்தை மையப்படுத்திய தகவல் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரசாரம் செய்ய வேண்டுமானால் ரஞ்சன் ராமநாயக்க, வேறு வழிகளை கையாள வேண்டும். அமைச்சர்களை பயன் படுத்தக் கூடாது என்றும் அமைச்சர் மத்தும பண்டார கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 30.01.2019 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் துரையழகு மங்கையகரசி**

அவர்களின் அந்தியேட்டி
வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று
01.03.2019 அவரது இல்லத்தில்
நடைபெறும்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (7687)

முருகன் கோவில் வீதி,
ஜெயபுரம் தெற்கு, ஜெயபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி.இராசு லட்சுமி



தலையாடி வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராசு லட்சுமி அவர்கள் 28.02.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.03.2019 இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தலையாடி வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். (7686)

தகவல்:
குடும்பத்தினர்.


## இராசி பலன்

01.03.2019
மாசி 17, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
தசமி பிற்பகல் 12.40 மணிவரை
மூலம் காலை 6.57 மணிவரை
சுபநேரம் 6.28 - 7.58 மணிவரை
இராகுகாலம் 10.58 - 12.28 மணிவரை

வளவன்

கிரகநிலை
செவ் | ராகு | சூரி., புத | சுக் | சனி, சந்., கேது | குரு

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**கடகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது நல்லது, சயனக்குறைவான நாள்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு:** எதிர்பாராத காரியமொன்று இன்று நடைபெறலாம், உடல் நலனில் கவனம் தேவை, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** அனைத்திலும் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி:** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வாகன பழுதுச் செலவுகள் குறையும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ். இந்தியத் துணைத் தூதுவராலயத்தின் அனுசரணையுடன் வட இலங்கை சங்கீத சபையில் தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை அண்மையில் நடைபெற்றது.(படங்கள்: தாவடிச் செய்தியாளர்)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் ஆரம்பக் கல்வி கற்றல் மூல வள நிலை யத் திறப்பு விழா இன்று முத லாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அதிபர் ந.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக வடமாகாண ஆளு நர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொள்வார். (5)

# துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைக்க வரணி நூலக வாசகர்கள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட வரணி பொது நூலகமானது பிரதேச மக்கள் அதிகம் பயன்படுத்தும் ஒரு நூலகமாகும். இந்த நூலகத்திற்கு இதுவரைக்கும் துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படாமை பெரும் குறைபாடாகவுள்ளது.

நூலகத்திற்கு வரும் வாச




கர்கள் மற்றும் மாண வர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை நடு வெயிலி லேயே நிறுத்த வேண்டியு ள்ளது.

அது மட்டுமன்றி மழை காலங்களிலும்வாசகர்களின் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றை மழையிலேயே நிறுத்த வேண்டியுள்ளது.

ஆகவே வாசகர்கள் மற்றும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாசகர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.(5-103)

# கோப்பாயில் விபத்து பெண் ஒருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் பெண் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை 8.50 மணியளவில் கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலைக்கு அருகாமையில் குறித்த விபத்து இடம்பெற்றது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற டி.விஜிதா (வயது -31) என்ற பெண்ணே தலையில் படுகாயமடைந்த நிலையில் கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (5-21-10)

# தரம் 5 மாணவர்களுக்கு இலவச செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

தரம் 5 மாணவர்களுக்கான இலவச செயலமர்வும் வினாவிடைத் தொகுப்பு வழங்கும் நிகழ்வும் சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவ சேனாதிபதியின்அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இதில் இன்று முதலாம் திகதி துனுக்காய் வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை மாகாண தொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரியிலும் நாளை 2 ஆம் திகதி யாழ். நகரப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை சாவகச்சேரி நகர சபை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (5-7)

# 64வது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 64 ஆவது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய மண்டபத்தில் கழகத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் சதா நிமலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.வரவேற்புரையைநயினை சி.சோமேஸ்வரப்பிள்ளையும் ஆசியுரையை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ர.கேசவக் குருக்களும் வாழ்த்துரையை ஆலய தர்மபரிபாலன சபை தலைவர் செ.சுப்பிரமணியமும் வழங்குவர்.

அத்துடன் நீதிநூல் மனனப் போட்டி, கோலம்போடுதல், மாலை கட்டுதல், தோரணம்பின்னுதல்ஆகியசெயல்முறைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து சிவராத்திரி நான்கு சாம பூசைகளாக இரவு 8 மணிக்கு முதலாம் சாமப் பூசையும் இரவு 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் நள்ளிரவு 12 மணிக்கு 2 ஆம் சாமப் பூசையும் அதிகாலை 3 மணிக்கு 3 ஆம் சாமப் பூசையும் அதிகாலை 5 மணிக்கு 4 ஆம் சாமப் பூசையும் நடைபெறவுள்ளது. (5)

# 'கலாதரம்' -2019 நூலிற்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் 2019 ஆம் ஆண்டு "கலாதரம்" எனும் பிரதேச மலர் வெளியீடு செய்யப்படவுள்ளமையால்எமது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டு பிரதேசம் சார்ந்த விடயங்கள் மற்றும் கலை பண்பாட்டம்சங்களுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடக்கிய ஆக்கங்களை எதிர்வரும் 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி.தென்மேற்கு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. யூ.யசோதா கேட்டுக்கொண்டுள்ளார். (5)

# உயர்தர மாணவர்களுக்கான திருக்குறள் தேர்வு நாளை

(யுாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவரிடையே நடத்தும் திருக்குறள் தேர்வு நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்வில் 800 மாணவர்கள் தோற்றவுள்ளதாகவும் மருத்துவபீடம், கலைப்பீடம், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் என்பவற்றின் பரீட்சை மண்டபங்களில் தேர்வு இடம்பெறவுள்ளதாகவும் தமிழ்ச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை தேர்வில் வெற்றிபெறுவோருக்கான பரிசில்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள திருவள்ளுவர் விழாவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-7)



மீசாலை மேற்கு நாவலர் கழக முன்பள்ளி சிறார்களின் மாதிரிச் சந்தை அண்மையில் முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் திருமதி. ச.அரியநாயகம், முன்பள்ளி இணைப்பாளர் ரி.தர்மிலா, இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: வர்ணன்)

# வல்வெட்டியில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையும் வல்வெட்டித்துறை பிரதேசவைத்தியசாலைநோயாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நகர சபை மண்டபத்தில் (மரக்கறிச் சந்தை மேல்தளம்) காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும்.

இவ் இரத்ததான முகாமில் இரத்ததானம் செய்ய விரும்புவோர் நேரிலோ அல்லது 021 226 3973/ 021 226 5611 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ அல்லது 077 670 1562/ 077 559 1219 ஆகிய இலக்கங்களுக்கு குறு ந்தகவல் மூலமோ அல்லது urban councilvvt@gmail.com என்னும் மின்னஞ்சல் மூலமாகவோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். 5-7



யாழ்.உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது...
(படங்கள்: [illegible] செய்தியாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கெய்ன் குற்றச்சாட்டு குறித்து கட்சிகள் மௌனம் காக்கக்கூடாது

(கொழும்பு)

கொக்கெய்ன் பயன்படுத்தும் அமைச்சர்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து, பிரதான அரசியல் கட்சிகள் இரண்டின் உறுப்பினர்களை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் கொக்கெய்ன் பயன்படுவத்துவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, கொக்கெய்ன் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் குறித்த தகவல்களை தாமதிக்காது வெளியிட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

பிரதான அரசியல் கட்சிகள் இரண்டின் தலைவர்கள், இந்த விடயத்தில் மௌனம் காக்க முடியாதென தெரிவித்த அத்துரலிய ரத்தன தேரர், முழு சமூகமும் இந்த விடயம் குறித்து அவதானத்துடன் இருக்கிறது எனத் தெரிவித்தார். (இ-7)



## அனுமதிப்பத்திரமின்றிய சாரதிக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஆட்பிணை

(கரணவாய்)

மனித உயிர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் வாகனத்தைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வாகனச் சாரதியை ஒரு இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதவான் சுதாகரன் நளினி நேற்று உத்தரவிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாகத் தெரிவித்ததாவது, நேற்று முன்தினம் 27 ஆம் திகதி யாழ். பருத்தித்துறை (750) வழி இலக்கப் பாதையில் பொது மக்கள் சேவையில் ஈடுபடும் குறித்த தனியார் பேருந்து அதிக பயணிகளை ஏற்றிச் சென்ற போது நெல்லியடிப் பொலிஸாரினால் வழிமறிக்கப்பட்டு சாரதியிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லையெனத் தெரியவந்தது. இதன் அடிப்படையில் குறித்த சாரதிக்கு எதிராக நெல்லியடிப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டதன் அடிப்படையில் நீதவானால் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (5-10-60)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

### ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கக் கூடியவரும் இலங்கையில் பல தரப்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றவருமான **பேராசிரியர் அருள்நிதி உழவன் முத்துவேல்** அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம்: 02.02.2019 சனிக்கிழமை தொடக்கம் 08.02.2019 வெள்ளிக்கிழமை வரை**
**நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை**
**பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

**அகத்தாய்வு 1 ஆம் நிலை 02.02.2019 சனி மற்றும் 03.02.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.**

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,**
**தொ.இல:- 021 222 2772**

(C-5642)



# Job Opportunity

**Applications are invited for the post of Administrative Secretary on contract basis.**

| | |
|---|---|
| Experience | ➢Minimum five years supervis ory and office management experience with the govt.depts, or NGOO<br>➢Excellent communication skills in English (verbal,written and presentaion) |
| Salary | Negotiable |
| Age Limit | 55-60 years |

**Candidate fulfilling the above mentioned criteria should send their CVs along with the educational and experience certificates under registered post to reach the**

**Chairperson**
**Jaffna Jaipur Centre for Disability Rehabilitation**
**5,Old park Road, Chundikuli, Jaffna on or before 8.3.2019**

(C-5643)



## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல் - 2019

**(01.04.2019 - 31.12.2019)**

1. இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம்
2. காலம் :- 19.03.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
3. நேரம் :- மு.ப 10.30

இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்:-

1. பகிரங்க ஏலத்தில் சித்தி பெறுபவர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (வரிகள் உட்பட) உடனடியாக சபையில் செலுத்துதல் வேண்டும். தவறின் ஏலத்தில் அடுத்ததாக சித்தி பெறுபவருக்கு வழங்கப்படும்.
2. ஒப்பந்தகாலம் 01.04.2019 - 31.12.2019
3. இந்நகராட்சி மன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இவ் ஏலத்தில் பங்குபற்ற முடியாது.
4. மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புக் கட்டணத்தை அலுவலகத்தில் 19.03.2019 மு.ப 10.00 மணிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
5. ஆட்டிறைச்சிக் கடை வாரத்தில் 03 நாட்கள் மட்டும் திறக்கப்படவேண்டும்.
6. இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை ஒப்பந்தம் தொடர்பான நிபந்தனைகளை நகராட்சி மன்றத்தின் கணக்குப் பகுதியில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

2019 ஆம் ஆண்டு இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் (01.04.2019 - 31.12.2019) | 09 மாதங்களுக்கான ஆகக்குறைந்த ஏலத்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|---|
| 1. | மாட்டிறைச்சிக்கடை இல-01 | 1,312,500.00 | 13,250.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை இல-02 | 1,312,500.00 | 13,250.00 |
| 3. | ஆட்டு இறைச்சிக்கடை இல-01 | 225,000.00 | 2,250.00 |
| 4. | ஆட்டு இறைச்சிக்கடை இல-02 | 225,000.00 | 2,250.00 |
| 5. | கோழி இறைச்சிக்கடை இல-01 | 562,500.00 | 5,650.00 |
| 6. | கோழி இறைச்சிக்கடை இல-02 | 562,500.00 | 5,650.00 |

குறிப்பு: இந்நகராட்சிமன்றத்தின் கடைகளிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

**நகராட்சி மன்றம் ,**
**சாவகச்சேரி தவிசாளர்.**
**28.02.2019**

(C-5641)

**திருமதி சிவமங்கை இராமநாதன்,**
**சாவகச்சேரி நகராட்சி மன்றம்.**



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 74 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L, Malasiya<br>எதிர்பார்ப்பு: தொழில்/தொழிலற்றபெண்<br>தொ.இ: B/607 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா:23 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/Lஎதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள் மனைவியை இழந்தவர்கள் விரும்பதக்கது<br>தொ.இ: G/2517 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:A/L,அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/676 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 30 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HND Business Management,AAT,CMA,Assistant Accountant<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் /வெளிநாடு<br>தொ.இ: G/2663 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:பரணி 3<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்:பட்டதாரி, London PR<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/679 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 37சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:B.Scஅரச ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:தொழில் புரிபவர்<br>தொ.இ: G/2668 |
| பிறப்பு: 1985இந்து கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம்:174cm<br>தகைமை/தொழில்:BAபட்டதாரிSwiss<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுPR, இந்து கிறிஸ்தவம் ஏற்கப்படும்<br>தொ.இ: B/683 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 1<br>கி.பா: 74 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDA, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/2671 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறப்போம் மன்னிப்போம் எனக்கூறி காலத்தை இழுத்தடிக்க வேண்டாம்

## வேலுகுமார் வலியுறுத்து



(கம்பளை)

மறப்போம் மன்னிப்போம் எனக்கூறி இனியும் காலத்தை இழுத்தடிக்காமல், போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

கம்பளையில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவரிடம், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வடக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "உறவுகளைஇழந்தவர்கள்,தொலைத்தவர்களுக்குத்தான் அதன் வலி என்னவென்று புரியும். இவ்வாறு போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மன வலியை 'மறப்போம், மன்னிப்போம்' என்ற வார்த்தையால் மட்டும் குணமாக்கிவிடமுடியாது.

எதையும் மறக்க முடியாது. மறக்கவும் கூடாது. மன்னிப்பு என்பது பாதிக்கப்பட்டவர்களின் மன நிலையைப் பொறுத்தவிடயமாகும்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் துடைக்கப்படும், நிலையானதொரு நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும், பொறுப்புக்கூறும் கடப்பாடு நிறைவேற்றப்படும் எனக்கூறிய ஜனாதிபதி, தற்போது அவை அனைத்தையும் மறந்து செயற்படுகின்றார்.

சர்வதேச சமூகத்தையும், அதுசார்ந்த அமைப்புகளையும் தொடர்ச்சியாக ஏமாற்ற முடியாது. அவ்வாறு ஏமாற்ற முற்பட்டால் அதன் விளைவுகள் படுபயங்கரமானவையாக இருக்கும்.

தாமதித்து வழங்கப்படும் நீதிகூட மறுக்கப்பட்ட நீதிக்கு சமனானதாகும். எனவே, இனியும் இழுத்தடிப்பு செய்யாமல், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## கவனிப்பாரற்ற உருவச் சிலை

(கரணவாய்)

நெல்லியடி நகரில் அமைக்கப்பட்டுள்ள அமரர். சிவசிதம்பரத்தின் உருவச் சிலை உரிய பராமரிப்பின்றி குப்பைகள் வைக்கப்படும் இடமாகக் காணப்படுகின்ற போதிலும் உரிய தரப்பினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர்.



முன்னாள் பிரதி சபாநாயகரும், முன்னாள் உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரம் கடந்த 2002 ஆம் ஆண்டு ஆறாம் மாதம் ஐந்தாம் திகதி அமரத்துவம் அடைந்தார்.

அவரின் நினைவாக நெல்லியடி நகரில் அவருக்கு உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டு 2015 11 மாதம் எட்டாம் திகதி அன்று அப்போதைய வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனினால் திறந்து வைக்கப்பட்டது.

சிலை அமைக்கப்பட்டதே தவிர அதனை உரிய தரப்பினர் அப்பகுதியை சீரான முறையில் பேணவில்லை. அது தொடர்பில் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்ட பின்னரே அப்பகுதி தூய்மையாக்கப்பட்டது.

தற்போது கழிவுகள் கட்டி வைக்கப்பட்டுள்ளதுடன் செடிகள் வளர்ந்தும் காணப்படுகின்றன. எனவே உரியவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டப்படுகின்றனர். (5-60)

## குற்றவாளிகள் ஆட்சியில்
# ஊழலுக்கு எதிராக போராடும் தகுதி ஜே.வி.பிக்கு இல்லை

(கொழும்பு)

குற்றவாளிகளை மீண்டும் ஆட்சியில் அமர்த்தி விட்டு ஊழலுக்கு எதிராக போராடும் தகுதி மக்கள் விடுதலை முன்னணியினருக்கு கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.



பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்.

இதன்போது பிணைமுறி முறைகேடுகளும், குற்றவாளிகளின் அரசாங்கம் பாதுகாத்தமையினையும் பொருட்படுத்த முடியாமையின் காரணமாகவே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதாகவும் ஜனாதிபதி மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தினார்.

ஆனால் இடைக்கால அரசாங்கத்திற்கும் மக்கள் விடுதலை முன்னணியே எதிராக செயற்பட்டு மீண்டும் பிணைமுறி ஊழல்வாதிகளின் ஆட்சியை பெற்றுக்கொடுக்க வழிமுறைகளை ஏற்படுத்தியது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## வசீம் தாஜுடீன் வழக்கு
# அலரிமாளிகையிலிருந்து சென்ற 14 வாகனங்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

வசீம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி சுமித் பெரேரா மற்றும் முன்னாள் கொழும்பு பிரதான நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ஆனந்த சமரசேகர ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.



ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் மேலதிக நீதவான் இசுறு நெத்திகுமார முன்னிலையில் விசாரணைக்கு வந்துள்ளது.

இந்த விசாரணையின் போது, குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்ற நாளன்று அலரிமாளிகையிலிருந்து சென்ற நான்கு வாகனங்கள் மற்றும் அவற்றின் பயணங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படுவதாக பிரதி சொலிசிற்றர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பாளர்களாக கடமையாற்றிய இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் சிலரின் பயணங்கள் சம்பந்தமாகவும் விசாரணை செய்யப்படுவதாக கூறிய பிரதி சொலிசிற்றர் ஜெனரல், அவர்களின் பயணங்கள் சம்பந்தமாக உத்தியோகபூர்வ பதிவறிக்கையை கண்டுபிடிக்க முடியாதிருப்பதாக கூறினார்.

அதேநேரம் உயிரிழந்த வசீம் தாஜுடீனின் தொலைபேசி மற்றும் கணனி ஊடாகவும் விசாரிக்கப்பட்டதாகவும், அவற்றின் ஊடாக முக்கியமான தரவுகளை கண்டறிய முடியவில்லை என்றும் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்த விசாரணைகளுக்கு அமைவான சாட்சிகளை கண்டறிவதில் உள்ள முன்னேற்றம் மிகவும் மந்தகதியில் இருப்பதாக நீதவான் இசுறு நெத்திகுமார திறந்த நீதிமன்றில் கூறினார்.

அதன்படி விசாரணை நடவடிக்கையை விரைவாக நிறைவு செய்யுமாறும், பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் முறைப்பாட்டாளருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து வழக்கை ஜூன் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான் அன்றைய தினம் விசாரணைகள் சம்பந்தமான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## திறப்பு விழாக்கள்

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அதிபர் வி.இ.ஹஸ்ரன் றோய் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கலந்து கொள்வார். (5-7)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள யாழ்.முஸ்லிம் சனசமூக நிலைய திறப்பு விழா இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். (5)

## வானப்பிரஸ்த வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான வானப்ரஸ்த வகுப்பு நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நல்லூர் சின்மயா மிஷனில் நடைபெறவுள்ளது. (5-7)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது குறித்து மகிந்தவுடன் மக்கள் விடுதலை முன்னணி சந்திப்பு





(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடன் அடுத்த வாரம் கலந்துரையாடவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கட்சித் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி அவரது இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், மகிந்த ராஜபக்ஷ தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு இன்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முடியாது என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும், ஐக்கிய தேசியக் கட்சியினரையும் சந்தித்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான ஆதரவைப் பெறுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசம் சந்தேகிப்பது போன்று சமூகங்களிடையே பிரச்சினையில்லை

## மல்வத்து அநுநாயக்கர் கூறுகின்றார்

(கண்டி)

நாட்டிலுள்ள சமூகங்கள் அனைத்தும் பரஸ்பர தோழமையுடன் எவ்வித பிரச்சினையுமின்றி இருப்பதாக, மல்வத்து மகா விகாரை பிரவின் அநுநாயக்கர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான பரஸ்பர புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளும் நோக்குடன் மியன்மார் ஊடகவியலாளர்கள் குழாம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

குறித்த குழுவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை மல்வத்து மகா விகாரை பிரவின் அநுநாயக்கரை சந்தித்து ஆசி பெற்றதுடன், அவருடன் கலந்துரையாடலொன்றையும் மேற்கொண்டனர். இதன்போதே அநுநாயக்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த கால யுத்தத்தின்போது இராணுவம், பொதுமக்கள் என இரு தரப்பிலும் உயிரிழப்புகள் சம்பவித்தன.

ஆனால், சிலர் கூறுவது போன்று நாட்டிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கு இடையே எவ்வித பிரச்சினையும் இல்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இனத்தவரும் இங்கு ஒத்துழைப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், சில இடங்களில் இடம்பெறும் சிறு சிறு இன வாத செயல்கள் முழு தேசத் திற்கும் அவப்பெயரை விளைவிப்பதாக அமைந்துள்ளன.

சர்வதேசத்திடம் யார் என்ன கூறினாலும் நாட்டில் அனைத்து சமூகங்களும் பரஸ்பர தோழமையுடனேயே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்" எனத் தெரிவித்தார். (இ-7)

# வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களை பயன்படுத்தி பணம் சம்பாதிக்கும் நாமல்



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கை தொழிலாளர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்கும் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளார் என பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

குவைத்தில் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 34 பெண்களை இலங்கைக்கு அழைத்து வர விமானப் பயணச் சீட்டுக்கள் தயார் செய்யப்பட்ட நிலையில், நாமல் ராஜபக்ஷ, சேனானி என்ற பெண்ணிடம், பயணச் சீட்டுக்களுக்கான பணத்தை சேகரிக்குமாறு டுவிட்டர் தகவல் ஒன்றை அனுப்பியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ வெளிநாடுகளிலுள்ள தொழிலாளர்களை தவறாக வழிநடத்தி தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளும் கீழ்த்தரமான அரசியலில் ஈடுபட்டு வருகிறார் எனவும் மனுஷ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.



அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புஹாமி, சேனானி என்ற இந்த பெண், இதற்கு முன்னர் பணச் சலவைச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டவர் எனத் தெரிவித்தார். (இ-7)

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம் கரன்னகொட வழக்கிலிருந்து நீதியரசர் ஒருவர் விலகல்



(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், குற்றப்புலனாய்வுப் பிரிவினர், தன்னைக் கைதுசெய்வதற்கு எதிரான உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை, எதிர்வரும் 7ஆம் திகதி பரிசீலிப்பதாக, உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

பிரதம நீதியரசர் நளின் பெரேரா, நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில், இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, தனிப்பட்ட காரணத்துக்காக இந்த வழக்கில் தன்னால் கலந்துகொள்ள முடியாதென நீதியரசர் பிரியந்த ஜெயவர்தன அறிவித்தார். இதனைத் தொடர்ந்தே, இந்த மனு மீதான பரிசீலனை மார்ச் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-7)

# நீதி, ஊடகத்துறை அமைச்சுக்களில் மாற்றம்; புதிய வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சுக்களில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை யடுத்து புதிய அமைச்சுக்களுக்கான திணைக் களங்கள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இம் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேற்படி விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கிணங்க நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த ஊடகத்துறையோடு இணைந்த விடயங்கள் மற்றும் திணைக்களங்கள், நிறுவனங்கள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சரவையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதற்கிணங்க தகவல் திணைக்களம், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சிச் சேவை, அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் ஆகியன அமைச்சரவை அந்தஸ்தற்ற ஊடகத்துறை அமைச்சின் கீழ் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சரவை அந்தஸ்தற்ற ஊடகத்துறை அமைச்சராக அண்மையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ருவான் விஜேவர்த்தன சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் அமைச்சரவை அந்தஸ்தற்ற விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் கிராமிய புத்தெழுச்சி நிதியம், மக்கள் ஊக்குவிப்பு நிதியம் ஆகிய நிறுவனங்கள் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

# வழக்குகள் தாமதமாவதற்கு சட்டமா அதிபரே பொறுப்பு

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி உள்ளிட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் தாமதமாவதற்கு சட்டமா அதிபரே பொறுப்பேற்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது சம்பந்தமாக பாராளுமன்ற விவாதம் நடத்தப்பட்டுள்ளதாகவும் எனினும் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியது சட்டமா அதிபர் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

விசேட மேல் நீதிமன்றம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் எனினும் அதில் ஓரிரு வழக்குகள் மாத்திரமே தற்போது இடம்பெறுவதாகவும் சுமந்திரன் தெரிவித்தர். (இ-7)



# புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தடை ஆங்கிலத்தை கற்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை, எதிர் வரும் காலத்தில் தடை செய்துவிட்டு, அதற்குப் பதிலாக, ஆங்கிலத்தை கற்பிக்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரட்ன தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட வலப்பனை கல்வி வலயத்துக்குட்பட்ட இராகலை தமிழ் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள், உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகக் கூறிய அவர், எனவே, இப் பரீட்சையை, மத்திய மாகாணத்தில் நடத்தாது தடை செய்ய, கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடி, விரைவான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையில், மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள், அவர்களை மன ரீதியாக பாதிப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் தேசிய கீதத்தில், அனை வரும் ஒருதாய் மக்கள் என பாடிக்கொண்டு, தமிழ், சிங்கள, முஸ்லிம் என வேறுபடுத்திக் கொள்ளும் நிலையை, பாடசாலைகள் மட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்றும் அதற்கென, மத்திய மாகாணத்தில், தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகள் என வேறுபாடு காட்டாமல், அனைத்து இன மாணவர்களும் ஒரே இடத்தில் கல்வி கற்கும் நிலையை உருவாக்கப் போவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, பெருந்தோட்டத் தேயிலை தொழிற்றுறையின் ஊடாக, கடந்த காலங்களில், அரசாங்கம் நாட்டை அபிவிருத்தி அடையச் செய்தது என்று கூறிய அவர், எனினும் தற்போது, தனியார் கம்பனிகளுக்கு இத் தொழிற்றுறை பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர், தேயிலை மலைகளே அலங்கோலமாகி விட்டன என்றும் தெரிவித்தார்.

இதே நிலை தொடர்ந்து நீடித்தால், இன்னும் ஐந்து வருடங்களில், தேயிலைத் துறை அழிந்து போய்விடும் என்றும் இந்த விடயத்தில், அரசாங்கம் மறுபரீலனை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# அம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்த ரூ.2 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

## அமைச்சர் ஹர்ச தெரிவிப்பு



(கொழும்பு)

அம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்துவதற்கு வரவு-செலவுத்திட்டத்தில் 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

'சுவசெரிய' அம்புலன்ஸ் சேவை நேற்று கண்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே ஹர்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"செல்வந்தர்களால் எந்தத் தொகைக்கும் அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், குறைந்த வருமானம் பெறுவோரின் நலன் .கருதி அம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

இவ்வளவு காலமும் ஒரு வைத்தியசாலையிலிருந்து இன்னொரு வைத்தியசாலைக்குச் செல்வதற்கான அம்புலன்ஸ் சேவை மாத்திரமே காணப்பட்டது.

ஆனால், 1990 அம்புலன்ஸ் சேவையின் மூலம் நோயாளி ஒருவரை அவரது வீட்டிலிருந்து 12 நிமிடங்களுக்குள் வைத்தியசாலையில் அனுமதிக்கும் வகையில் சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம்

## ஐ.நாவிற்கு மகஜர் கையளிப்பு








(மன்னார்)

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வியாழக்கிழமை மன்னாரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்ததோடு,தமது கோரிக்கை அடங்கிய மகஜரை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைக்குமாறு கையளித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் மனித புதை குழி அகழ்வுப் பணிகள் இடம் பெறும் பகுதியைச் சென்றடைந்தது.

இதன்போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், உட்பட தென் பகுதியில் இருந்து அருட்சகோதரர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது அகழ்வுப் பணிகள் இடம்பெறும் பகுதிக்கு முன் ஒன்றுகூடிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல்வேறு கோசங்களை எழுப்பினர்.அதனைத்தொடர்ந்து குறித்த ஊர்வலம் மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாகச் சென்று மன்னார் மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது.

பின்னர் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்றுகூடி பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கின்ற இச்சூழலில் மேலும் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் கொடுக்க வேண்டாம், இலங்கை அரசாங்கத்தை நீதிப்பொறிமுறையில் இருந்து தப்ப வைக்கக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், மன்னார் மனித புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் யார், புதைத்தவர்கள் யார்? உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு அனுப்புவதற்கான மகஜர் வாசிக்கப்பட்டு மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவியினால் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலம் குரூஸ் அடிகளாரிடம் கையளிக்கப்பட்டது. (2-285)

## வெடிக்காத நிலையில் மோ.குண்டு மீட்பு



(குருமன்காடு)

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று வெடிக்காத நிலையில் இருந்த மோட்டார் குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள வர்தக நிலையம் ஒன்றிற்கு முன்பாக கொட்டப்பட்டிருந்த கிரவல் மண்ணில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அப்பகுதியில் நின்றிருந்தவர்கள் அவதானித்ததுடன். இவ்விடயம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு விஜயம் செய்த பொலிஸார் மோட்டார் குண்டை அவதானித்துள்ளதுடன் விசேட அதிரடிப் படையினருக்கும் தகவல் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் நீதிமன்ற அனுமதியின் பின்னர் குறித்த மோட்டார் குண்டை அப்பகுதியில் இருந்து அகற்றவுள்ளதாக தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக ஓமந்தை பகுதியில் இருந்து குறித்த கிரவல் மண் கொண்டுவரபட்டு வர்த்தக நிலையத்திற்கு முன்பாக பறிக்கப்பட்டிருந்தமை தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

## மாணவர் சந்தை நிகழ்வு





(குருமன்காடு)

வவுனியா அகில இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் மாணவர் சந்தை நிகழ்வு நேற்று கல்லூரியின் அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

தரம் 2 இலிருந்து தரம் 5 வரையான மாணவர்கள் பாடசாலையில் மண்டபத்தில் ஆர்வத்துடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்களுக்கிடையில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும் ஆளுமை தன்மையை மாணவர்களுக்கிடையில் வளர்க்கும் நோக்குடனான கல்வி நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இச்சந்தை நிகழ்வு நடைபெற்று வருவதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். இச்சந்தை நிகழ்வை பார்வையிட்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் மாணவர்களின் சந்தைப் பொருட்களை ஆர்வமுடன் கொள்வனவு செய்ததை காணக் கூடியதாக இருந்தது. (2-250)

வன்னி வலம்

## மூன்று பவுசர் வாகனங்கள் மன்னார் மாவட்டத்திற்கு வழங்கி வைப்பு



(மன்னார்)

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி குடிநீர் பவுசர் வாகனங்களில் மன்னார் மாவட்டத்திற்கு என மூன்று பவுசர் வாகனங்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அனார்த்த நிவாரண சேவைகள் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டு வழங்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டத்திற்கும் வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்ட குறித்த பவுசர் வாகனங்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் நேற்று வியாழக்கிழமை மாலை தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்பட்டன.

மாந்தை மேற்கு, மடு மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளில் பயன்படுத்துவதற்காக குறித்த பவுசர் வாகனங்கள் பிரதேச செயலாளர்களிடம் மாவட்ட அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

குறித்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன், அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் தே.திலீபன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-285)

## நூல் வெளியீடும் பாடசாலையின் பெண் சாதனையாளர் கௌரவிப்பும்

(கிளிநொச்சி)

கவிஞர் நெடுந்தீவு முகிலன் எழுதி, வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிடும் பெண்களின் வலிகளைப் பேசும் கவிதை நூலான ''வெளியே புன்னகை அரசி உள்ளே கண்ணீருக்கு அடிமை'' நூலின் வெளியீட்டு விழாவும் சுவிட்சர்லாந்து பேர்ண் வள்ளுவன் பாடசாலை ஏற்பாட்டில் புனித திரேசா பெண்கள் கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு முன்னாள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் புனித திரேசா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய த.குருகுலராசா தலைமை வகிப்பார். கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராகவும் பிரான்ஸ் வாழ் கவிஞர் ஈழ பாரதி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கலை வாணி சௌந்தரராஜன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் வற்சலா துரைசிங்கம், கலாபூஷணம் , வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை, கவிஞர் காவலூர் அகிலன், கவிஞர் தே.பிரியன், கவிஞர் வட்டக்கச்சி வினோத் ஆகியோர் கலந்து கொள்வர். நூலின் அறிமுக உரையை யோ.புரட்சி நிகழ்த்துவார். ஆய்வுரையை வன்னி மகள் எஸ்.கே.சஞ்சிகா நிகழ்த்துவார். நூலினை புனித திரேசா மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி அன்ரனி சாந்தா மரிய நாயகம் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை கிருபா லேணர்ஸ் அதிபர் அ.கிருபாகரன் பெற்றுக் கொள்வார்.

ஏற்புரையை கரைச்சி பிரதேச சபை உறுப்பினரும் புனித திரேசா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியுமான திருமதி. விக்ரர் சாந்தி நிகழ்த்துவார். நன்றியுரையை கவிஞர் சாந்தனூர் அப்பன் வழங்குவார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிய உரக்கொடுப்பனவுகளில் மோசடி

# பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளாது தவறான பதிவுகளின் ஊடாக நிதிபெற்றமை அம்பலம்

(கண்டாவளை)

கிளிநொச்சி புளியம் பொக்கணை கமநலசேவை நிலையத்தின் ஊடாக கடந்த 2017, 2018ஆம் ஆண்டுக்கான மானிய உரத்திற்கான கொடுப்பனவுகளில் அரச உத்தியோகத்தர்கள் மோசடி செய்து மானியக் கொடுப்பனவுகளை பெற்றமை தொடர்பில் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாகப் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அம்பலமாகியது.

கிளிநொச்சி புளியம் பொக்கணை கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பில் கடந்த 2017, 2018 காலப் பகுதியில் வழங்கப்பட்ட மானிய உரத்திற்கான கொடுப்பனவுகளில் அரச உத்தியோகத்தர்கள் பலர் குறித்த பிரதேசத்தில் எந்தவிதமான பயிர்ச் செய்கைகளும் மேற்கொள்ளாது தவறான பதிவுகளை மேற்கொண்டு இலட்சக்கணக்கான நிதிகளை முறைகேடாகப் பெற்றுள்ளனர்.

அதாவது, குறித்த காலபோகத்தின் போது பயிர்ச் செய்கை மேற்கொள்ளாத அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஆறு பேர் தலா 25 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை மானிய உரக்கொடுப்பனவாக பெற்றுள்ளனர்.

ஆனால், இக்காலப்பகுதியில் குறித்த பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் பலருக்கு மானிய உரத்திற்கான கொடுப்பனவுகளோ மானிய உரங்களோ வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில், கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி காலை இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சமுகமாகியிருந்த ஊழல் மோசடியில் ஈடுபட்ட குறித்த அரச அதிகாரிகள் மேற்படி காலபோக செய்கை மேற்கொள்வதற்கு தான் தலா ஐந்து ஏக்கர் காணி வீதம் இந்த அதிகாரிகளுக்கு வழங்கியதாக விவசாயி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இதனை கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள், ஏற்றுக்கொண்டு அதனை நியாயப்படுத்தினர்.

இதனையடுத்து, தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஊடாகப் பெறப்பட்ட தகவலின் படி அதிகாரிகளுக்கு காணி வழங்கியதாகச் சொல்லப்படும் விவசாயிக்கு, ஒரு ஏக்கர் வயல்காணி மாத்திரமே உள்ளது என்றும் இதற்கான பதிவு தற்காலிக வயல் காணி இடாப்பில் பதிவிடப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளதுடன், இவர்கள் நியாயப்படுத்திய விவசாயிக்கு ஒரு ஏக்கர் காணி தவிர வேறு காணி இல்லை என்பது ஆதார பூர்வமாக நிருபணமாகியுள்ளது.

இதேவேளை குறித்த மானிய உரத்திற்கான கொடுப்பனவுகளில் கமக்கார அமைப்பு மற்றும் அதிகாரிகள் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பில் நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பின் உபசெயலாளரினால் வடமாகாண ஆளுநர், விவசாய அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் குறித்த சம்பவம் தொடர்பில் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (2-315)




## மகா சிவராத்திரிப் பெருவிழா

(கண்டாவளை)

கிளிநொச்சி முரசுமோட்டை அருள்மிகு சங்கரநாராயண சிவலிங்கேஸ்வரர் ஆலயத்தின் மகாசிவராத்திரிப் பெருவிழா நடைபெறவுள்ளது.

முரசுமோட்டை ஈழத்துக்காசிசேத்திரம் என குறிப்பிடப்படும் அருள்மிகு சங்கரநாராயண சிவலிங்கேஸ்வரர் திருக்கோவிலின் மகாசிவராத்திரிப் பெருவிழா எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணி முதல் மறுநாள் 5 ஆம் திகதி அதிகாலை 6 மணி வரை நான்கு சாமப்பூசைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## புழுப்பிடித்த நிலையில் சூடைமீன்; விற்பனை பகுதியிலிருந்து அகற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் மீன் விற்பனை பகுதியில் ஒரு பெட்டி சூடைமீன் புழுப்பிடித்த நிலையில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் கரைச்சி பிரதேச கழிவகற்றும் வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ளது.

குறித்த சந்தைப்பகுதியில் ஒரு பெட்டி சூடைமீன் புழு பிடித்ததை அவதானித்த கரைச்சி பிரதேச சபையினர் உடனடியாக கரைச்சி பிரதேசசபை தவிசாளருக்கு தெரியப்படுத்தினர்.

உடனடியாக அவ் விடத்திற்கு விரைந்த தவிசாளர், சுகாதார பரிசோதகர் ஆகியோர் அம் மீன்களைப் பரிசோதனை செய்து புழுப்பிடித்த மீன்பெட்டிகளை மக்கள் பாவனைக்கு உதவாதென தெரிவித்து கரைச்சி பிரதேசசபை கழிவகற்றும் வாகனத்தில் ஏற்றியதுடன் ஏனைய வியாபாரிகளின் மீன் வகைகளையும் பரிசோதனைக்குட்படுத்தினர். (2-271)

## கரைச்சி பிரதேச சபை வளாகத்தில்

## 2017-ல் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் நாளை மறுதினம் திறக்கப்படும்



(கிளிநொச்சி )

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி சந்தைக்கு அருகாமையிலுள்ள கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் 52 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் திறந்து வைக்கப்படும்

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்டபட்ட இவ் ஆயுள்வேத வைத்தியசாலையின் கட்டடப் புனரமைப்பிற்காக 2.6 மில்லியன் ரூபா நிதியை வடக்கு மாகாண சபையும் மிகுதித் தொகையை கரைச்சிப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டிலும் பயன்படுத்தி புனரமைக்கப்பட்ட வைத்தியசாலை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த கட்டடம் 2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட நிலையில் திருத்த வேலைகள் முடிவுறுத்தப் படாமையால் இரு வருடங்களுக்குப் பின்னர் நாளை மறுதினம் திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-10)

## அறுவடை செய்த நெல்லை

## சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் அவதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழ் காலபோக அறுவடை மேற்கொள்கின்ற விவசாயிகள் உரிய விலையில் சந்தைப்படுத்த முடியாத பாரிய நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு ஆறாயிரத்து 500 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் அறுவடை செய்கின்ற நெல்லை சந்தைப்படுத்த முடியாது குறைந்த விலைகளில் நெல்லை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்தப்பிரதேசத்தில் யுத்தத்திற்கு முன்னர் துணுக்காய் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், பனங்காமம் பலநோக்குக் கூட்டு றவுச்சங்கம் ஆகியவற்றின் அரிசியாலைகள் குறித்த பிரதேசத்தின் நெல்லை கொள்வனவு செய்திருந்தது.

மீள்குடியமர்வின் பின்னர் இப்பாரிய அரிசியாலைகளும் மீள்புனரமைப்பு செய்யப்பட்டாலும் இதுவரை இயங்காத நிலையில காணப்படுகின்றன.

இவ்வாறு அரிசியாலை இயங்கும் பட்சத்தில் இந்த நெல்லை உரிய முறையில் சந்தைப்படுத்தக்கூடிய நிலையில் இருக்குமென விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (2-315)

## பிரமந்தனாறு குளத்தின் கீழ் இவ்வாண்டு 450 ஏக்கரில் உப உணவு பயிர்ச்செய்கை





(கண்டாவளை)

கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோகத்தில் 450 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான பெரும்போக பயிர்ச்செய்கை கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு குளத்திற் கான சிறுபோக பயிர்ச் செய்கை கூட்டம் நேற்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கண்டாவளை பிரதேச செயலாளர் ரீ.பிருந்தாகரன் , நீர்ப்பாசன பொறியியலாளர் பரணிதரன், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள்,விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

பல்வேறு அபிவிருத்தி வேலைகளையும் சம நேரத்தில் முன்னெடுக்கும் பொருட்டு 450 ஏக்கர் காணிகளில் உப உணவு பயிர்ச்செய்கையை மேற்கொள்வதென [illegible] மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. குறித்த பகுதியில் 602 பங்காளர்களுக்கான 450 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சியின் போது உளுந்து, பயறு, நிலக்கடலை, சோளம் போன்ற பயிர்களை பயிரிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிலப்பகுதிகளில் நீண்ட காலப் பயிர்கள் எதனையும் அதாவது தென்னை, மா, பலா போன்ற பயிர்கள் பயிரிட முடியாது என்றும் பயிர்ச்செய்கையின் போது கால்நடைகளை கட்டுப்படுத்துதல், வாய்க்கால்களை துப்புரவு செய்தல் போன்ற செயற்பாடுகளை கூட்டத் தீர்மானத்துக்கமைய முன்னெடுக்குமாறும் இவற்றை மீறி செயற்படுவோருக்கு கூட்டத்தின் தீர்மானத்தின்படி சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துமாறும் கூட்டத்தில் தீர்[illegible] (2-315)

## மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழுவினர் வைத்தியசாலைகளுக்கு திடீர் விஜயம்

## எதிர்காலத்திட்டங்கள் குறித்து ஆராய்வு

(மல்லாவி)

வடக்கு மகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ரி.பூங்கோதை ஆகியோர் கடந்த 26 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து வைத்தியசாலைகளையும் நேரில் சென்று பார்வையிட்டு அங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் குறித்தும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

இவர்கள் அன்றைய தினம் மல்லாவி, துணுக்காய், மாங்குளம், நட்டாங்கண்டல், ஐயன்கன்குளம் ஆகிய வைத்தியசாலைகளுக்கு சென்று வளாகங்களைப் பார்வையிட்டதுடன் கடமையிலிருந்து உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அந்தந்தப் பிரதேச சபை தவிசாளர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் வைத்தியசாலையின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் தேவைகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொதுமக்களைச் சந்தித்து வைத்திய தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் அனைத்து தேவைகளும் படிப்படியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவுடன் போர் மூண்டால் மிகவும் கொடூரமாக இருக்கும்

### பாக்.புகையிரதத்துறை அமைச்சர் கூறுகிறார்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடன் போர் ஏற்பட்டால் அது 2 ஆம் உலகப்போருக்கு பிறகு மிகவும் பெரிய போராக இருக்கும் என பாகிஸ்தான் புகையிரதத்துறை அமைச்சர் ஷேக் ரஷித் அகமது தெரிவித்துள்ளார்.



புல்வாமா பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் அதற்கு பிந்தைய இந்திய விமானப்படையின்பதிலடி போன்ற நடவடிக்கைகளால் இந்தியா-பாகிஸ்தான் இடையே உச்சக்கட்ட பதற்றம் நிலவி வருகிறது.

எல்லையில் போர் மேகம் சூழ்ந்திருப்பதால் அங்கு பதற்றத்தை தணிக்க நடவடிக்கை எடுக்குமாறு இரு நாடுகளையும் உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த பரபரப்பான சூழலில் இருநாடுகளுக்கு இடையே போர் ஏற்பட்டால் அது மிகவும் பயங்கரமானதாக இருக்கும் என பாகிஸ்தான் புகையிரதத் துறை அமைச்சர் ஷேக் ரஷித் அகமது கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக ஆத்திரமூட்டும் கருத்துக்களை அடிக்கடி கூறி வரும் அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில், 'பாகிஸ்தான் பெரும்பாலும் போர்ச்சூழலுக்கு வந்துவிட்டது. அவசர கால சட்டங்களை ரயில்வே ஏற்கனவே பின்பற்ற தொடங்கி விட்டது. இந்தப் போர் கொடூரமானதாக இருக்கும். ஏனெனில் பாகிஸ்தான் முற்றிலும் தயாராகி விட்டது' என மேலும் தெரிவித்தார். (7)

## இந்திய எல்லைக்கட்[...] குறிவைத்து பாக்.ராணு[...]

(சென்னை)

**எல்லையில் நேற்று பாகிஸ்தான் அத்துமீறித் தாக்குதல் நடத்தியது. இந்தியா சார்பில் அத்தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்பட்டது.**

போர்ப்பதற்றமான இந்தச் சூழ்நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்திய எல்லைக் கட்டுப்பாடு நிலையை குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

பாகிஸ்தான் தாக்குதலுக்கு இந்திய தரப்பும் தக்க பதில் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்திய தரப்பில் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கிருஷ்ண காதி செக்டரில் காலை 6 மணிக்குத் தொடங்கிய துப்பாக்கிச் சூடு, 7 மணி வரை நீடித்துள்ளது.

எல்லைக்[...] தான் அத்து[...] மான ஒ[...]

## இந்[...]



## பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் மரியாதையாக நடத்துகிறார்கள்

### இந்திய விமானி அபிநந்தன் பெருமிதம்



எல்லையில் நடந்த இந்தியா - பாகிஸ்தான் இடையேயான மோதல் குறித்து விபரித்த வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர், இந்திய விமானப்படை விமானி அபிநந்தன் பாகிஸ்தான் இராணுவ பிடியில் சிக்கியதை உறுதி செய்துள்ளார்.

இதனிடையே சமூக வலைதளங்களில் காணொளி வைரலாகி வருகிறது. அதில், கண்கள் கட்டப்பட்டு, கைகள் பின்புறம் கட்டப்பட்ட நபர் ஒருவர், எனது பெயர் அபிநந்தன். நான் இந்திய விமானப்படையின் விமானி. எனது சர்வீஸ் எண் 27981, எனது மதம் இந்து என்று கூறுகிறார். வீடியோ வைரலானதை அடுத்து, விமானி அபிநந்தனை இந்தியாவுக்குப் பத்திரமாக அழைத்து வர வேண்டும் என்று குரல்கள் எழுந்துவருகின்றன. இதுதொடர்பான ஹேஷ்டேகுகள் டுவிட்டரில் ட்ரெண்டாகி வருகின்றன.

நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்ட காணொலியில் அபிநந்தனுடன் பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் உரையாடுகிறார். அப் போது அபிநந்தன் தேநீர் குடித்துக் கொண்டே, "பாகிஸ்தான் இராணுவம் என்னை நன்றாகவே நடத்துகின்றது. நான் இந்தியாவுக்குச் சென்றாலும் என் கருத்தை மாற்ற மாட்டேன்.

பாகிஸ்தான் இராணுவத்தினரின் நடவடிக்கை விரும்பத்தக்க வகையில் உள்ளது. என்னைக் காப்பாற்றி நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள். பாகிஸ்தான் இராணுவ கப்டன் முதல் வீரர்கள் வரை என்னை அனைவரும் மரியாதையாகவே நடத்துகிறார்கள்" எனத் தெரிவித்தார். (7)

## கெய்ரோ ரயில் [...] 25 பேர் உயிரிழப்[...]



(கெய்ரோ)

எகிப்து தலைநகர் கெய்ரோவிலுள்ள பிரதான ரயில் நிலையத்தில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரயில் எஞ்சின் தடுப்பொன்றில் மோதியதில் நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த அ[...] ணையடுத்து [...] சம்பவத்துட[...]

குறித்த [...] யமடைந்த [...] லையில் சி[...] ள்ளனர்.

## பிடிபடும் முன் பாகிஸ்தானிடம் ஆவணங்கள் சிக்காதவாறு அழிக்க முயன்ற அபிநந்தன்

### வானில் சுட்டுக்கொண்டே ஓடினார்

பாகிஸ்தானிடம் பிடிபட்டுள்ள இந்திய விமானி அபிநந்தன், அதற்கு முன் இந்திய ஆவணங்களை அழிக்க முயன்றதாகவும் துரத்தியவர்களிடம் இருந்து தப்பிக்க வானில்சுட்டுக்கொண்டே ஓடியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

புல்வாமா தீவிரவாதத் தாக்குதலில் 45 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாகப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருக்கும் பாலகோட்டில் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் முகாம்கள் மீது இந்திய விமானப் படை தாக்குதல் நடத்தியது.

இதைத் தொடர்ந்து இந்திய எல்லையான ரஜவுரி பகுதியில் வந்து குண்டு வீசிவிட்டு பாகிஸ்தான் விமானங்கள் சென்றன. அப்போது பாகிஸ்தானின் எப்-16 ரக விமானத்தை இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியது. இதற்கிடையே பாகிஸ்தான் எல்லைப்பகுதிக்குள் சென்ற இந்திய மிக் ரக விமானங்களை அந்நாட்டு ராணுவம் சுட்டு வீழ்த்தியது. இதில் இந்திய விமானி அபிநந்தன்பாகிஸ்தானால் கைதுசெய்யப்பட்டார்.

சென்னையைச் சேர்ந்த அபிநந்தன் 'பாகிஸ்தான் ராணுவத்திடம் சிக்கியதும் அவரை ராணுவமும், பொது மக்களும் சேர்ந்து தாக்கினர். ரத்தம் முகத்தில் வழிந்தோட, கைகள் கட்டப்பட்ட நிலையில் அபிநந்தன் அழைத்துச்செல்லப்படும் காணொலி வெளியானது. அவரைப் பாதுகாப்பாக மீட்கக்கோரி உலகம் முழுவதும் குரல்கள் எழுந்து வருகின்றன.

இதனிடையே விங் கமாண்டர் அபிநந்தனின் தைரியம் குறித்த விபரங்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் இதழான "டான்" வெளியிட்டுள்ள செய்தியில், மொகமது ரசாக் சவுத்ரி என்பவர் இரண்டு விமானங்கள் சுடப்படுவதைப் பார்த்தார். ஒன்று எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடந்து இந்திய எல்லைக்குள் விழுந்தது. மற்றொரு விமானம் வெடித்து, அதிலிருந்து புகை வர ஆரம் பித்தது. பரசூட் மூலம் பாதுகாப்பாகத் தரையிறங்கினார். அதிலிருந்த விமானி அபிநந்தன்.

பிஸ்டலுடன் இருந்த அவர், அங்கிருந்த இளைஞர்களிடம் இது இந்தியாவா, பாகிஸ்தானா என்று கேட்டுள்ளார். அவர்கள் வேண்டுமென்றே இது இந்தியா என்று கூறியுள்ளனர். உடனே இந்தியாவை ஆதரித்து கோஷமிட்டார் அபிநந்தன். இளைஞர்களிடம், தன்னுடைய முதுகுப்புறத்தில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், குடிக்கத் தண்ணீர்வேண்டும்என்றும் கேட்டுள்ளார்.

இந்தியாவை ஆதரித்து அவர் பேசியது பாக். இளைஞர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது. உடனே கீழே கிடந்த கற்களை எடுத்துத் தாக்கிய அவர்கள், அபிநந்தனைத் தாக்க ஆரம்பித்தனர். உடனே வானில் சுட்டவாறே ஓட ஆரம்பித்தார் அபிநந்தன். அவர்கள் அருகே வருவதைத் தடுக்கும் பொருட்டு தொடர்ந்து சுட்டுக்கொண்டே ஓடினார்.

ஆனால், தான் துரத்தப்படுவதை உணர்ந்த அவர், அருகில் இருந்த சிறிய குளத்துக்குள் குதித்தார். தன்னிடமிருந்த இந்திய ஆவணங்களையும் வரைபடங்களையும் நீருக்குள் மூழ்கடிக்க முயற்சித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## பாகிஸ்தான் பிடியிலுள்ள விமானியை உடன் விடுவிக்க இந்தியா வலியுறுத்து



பாகிஸ்தான் பிடியில் சிக்கியுள்ள இந்திய விமானி அபிநந்தனை உடனடியாக விடுவிக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், விமானி குறித்த காணொலி வெளியிடப்பட்டதற்கு இந்திய வெளியுறவுத்துறை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாக இந்திய போர் விமானத்தை பாகிஸ்தான் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தியது.

இதன்பின்னர் அந்நாட்டின் எல்லைக்குள் ஊடுருவியதாக கைதான இந்திய விமானியின் பெயர் மற்றும் அவரது விமானப்படை அடையாள எண்ணை பாகிஸ்தான் வெளியிட்டதுடன் காணொலி காட்சியையும் வெளியிட்டுள்ளது.

இது குறித்து கண்டனம் வெளியிட்டுள்ள வெளியுறவுத் துறை, காயமடைந்த இந்திய விமானப்படை வீரரின் படங்களை மோசமான வகையில் காட்சிப்படுத்துதல் சர்வதேச மனித உரிமை சட்டங்களின் அனைத்து விதிமுறைகள் மற்றும் ஜெனிவா உடன்படிக்கையில் உள்ள சரத்துக்களை மீறும் வகையில் அமைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் பாகிஸ்தான் பிடியில் சிக்கியுள்ள விமானி அபிநந்தனுக்கு எந்தவித தீங்கும் ஏற்படக்கூடாது எனவும் அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தியுள்ளது. (7)

## இந்தியாவு[...] ராணுவ நடவடி[...]

### பென்டகன் வே[...]



(வோஷிங்டன்)

இந்தியாவும் பாகிஸ்தானும் இராணுவ நடவடிக்கையை கைவிடும்படி அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் வலியுறுத்தியுள்ளது.

புல்வாமா தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா- பாகிஸ்தான் இடையிலான பதற்றம் அதிகரித்துள்ளது. இந்திய விமானப்படை பாகிஸ்தான் ஆக்கி[...] வாமா தாக்கு[...] முகமது பய[...] முகாமை [...] ணுவம் எல்[...] யுள்ளது. இ[...] அபாயம் உ[...]

இந்தியா[...] நிலவும் தற்[...] பதாகவும், இ[...] க்கைகளை [...] அமெரிக்க [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு


## ட்டுப்பாடு நிலையை
## னுவம் துப்பாக்கிச்சூடு!

### ந்தியாவும் தக்க பதிலடி



லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் பாகிஸ் அத்துமீறி தாக்குதல் நடத்துவது வழக்க ஒன்றுதான் என்றாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான சூழலில் இந்தத் தாக்குதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. (7)

## நிலையத்தில் தீ
## பு; 50 பேர் காயம்



அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இத
த்து, ரயில் நிலையத்தில் பாரிய வெடிப்பு
துடன், தீ பரவியுள்ளது.
த்த அனர்த்தத்தில் 50 பேர் படுகா
ந்த நிலையில், அவர்கள் வைத்தியசா
ல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு
ர்.

எகிப்தின் ரயில்வே அமைப்பு பாதுகாப்பற்றதாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் குறைந்தளவிலான முதலீடு மற்றும்மோசமான நிர்வாகமே இதற்கு காரணம் என்று பலரும் குற்றம் சாட்டி யுள்ளனர்.

இதேவேளை, கடந்த 2017ஆம் ஆண்டு இரு பயணிகள் பேருந்து ஒன்றுடனொன்று மோதி விபத்திற்குள்ளானதில் 43 பேர் உயிரிழந்ததுடன், ஏறக்குறைய 100 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## வும் பாகிஸ்தானும்
## டிக்கையை கைவிடுங்கள்

### வேண்டுகோள்



ஆக்கிரமிப்பு காஷ்மீரில் புகுந்து. புல்
தாக்குதலுக்கு பொறுப்பேற்ற ஜெய்ஷ் இ
பயங்கரவாத இயக்கத்தின் பயிற்சி
ம அழித்ததால் பாகிஸ்தான் இரா
எல்லையில் தாக்கு தலை தொடங்கி
. இதே நிலை நீடித் தால் போர் மூளும்
உள்ளது.
யாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே
தற்போதைய சூழல் கவலை அளிப்
ம். இரு நாடுகளும் இராணுவ நடவடி
ளை தவிர்க்க வேண்டும் என்றும்
க்க இராணுவ தலை மையகமான

பென்டகன் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இந்தியா-பாகிஸ்தான் பதற்றம் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பொம்பியோ, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன், மத்திய பாதுகாப்பு படை கமாண்டர் ஜோசப் வோட்டல் மற்றும் அதிகாரிகளுடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் (பொறுப்பு) பேட்ரின் ஷானகான் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்.

பதற்றத்தை தணிப்பதில் அமைச்சர் ஷானகான் கவனம் செலுத்தி வருகிறார். இரு நாடுகளும் மேற்கொண்டு இராணுவ நடவடிக்கையை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (7)

# இரு துருவங்களின் இரண்டாம் சந்திப்பு

(ஹனோய்)

வியட்நாமின் ஹனோய் நகரில் உள்ள ஹோட்டலில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வட கொரியா ஜனாதிபதி' கிம் ஜாங் உன்னும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.

வடகொரியாவும் அமெரிக்காவும் நிரந்தரப் பகை நாடுகளாக உள்ளன. சீனா மற்றும் தென்கொரியா நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக கிம் ஜாங் உன் தனது பிடிவாதப் போக்கை கைவிட்டு அமெரிக்காவுடன் சமரசமாக செல்ல முன் வந்தார்.



கடந்த ஆண்டு ஜூன் மாதம் ட்ரம்ப் - கிம் ஆகியோர் சிங்கப்பூரில் உள்ள சென்ட்டோசா தீவில் கேபெல்லா ஹோட்டலில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி னர்.

இதையடுத்து, இருநாட்டு தலைவர்களும் மீண்டும் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. பல கட்ட ஆலோசனைக்கு பிறகு வியட்நாம் தலைநகர் ஹனோயில் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# இந்தியா- பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தமாக செயற்பட்டு பதற்றத்தை தணிக்கத் தயார்

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திடீர் அறிவிப்பு

இந்தநிலையில் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை சந்திக்க வியட்நாம் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில், "இந்தியா - பாகிஸ்தான் இடையே தற்போது நிலவும் மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என நம்புகிறோம்.

இருநாடுகள் இடையே மத்தியஸ்தம் செய்து உதவி செய்ய தயாராக இருக்கிறோம். அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்" எனத் தெரிவித்தார். (7)

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றம் விரைவில் முடிவுக்கும் வரும், இருநாடுகள் இடையே மத்தியஸ்தம் செய்ய தயாராக இருக்கிறோம் என ஜனாதிபதி ட்ரம்ப் திடீரென அறிவித்துள்ளார்.

புல்வாமா தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய மிராஜ் 2000 போர் விமானங்கள் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி அழித்தன. இதில் பாலகோட், சாக்கோட், முஸாஃபராபாத் ஆகிய இடங்களில் தாக்குதல் நடந்துள்ளன. அங்கு இயங்கி வந்த முக்கிய தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன.'

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், 2 பாகிஸ்தான் விமானங்கள் இந்திய எல்லைக்குள் உள்ள காஷ்மீரின் நவ்ஷாரா பகுதியில் அத்துமீறி நுழைந்தது.

இதில் ஒரு விமானத்தை நமது வீரர்கள் சுட்டு வீழ்த்தினர். அதேசமயம், இந்திய விமானம் ஒன்று நொறுங்கி விழுந்துள்ளது. அதில் இருந்த விமானி அபிநந்தனை பாகிஸ்தான் இராணுவம் உயிருடன் கைது செய்துள்ளது.

இருநாடுகள் இடையே பதற்றம் சூழ்ந்துள்ள நிலையில் அதனை தணிக்கும் முயற்சியில் உலக நாடுகள் பலவும் இறங்கியுள்ளன.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இதுதொடர்பாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.



இந்தியாவும், பாகிஸ்தானும் கட்டுப்பாட்டை கடைப்பிடித்து அமைதி நிலவ முன்வர வேண்டும் என அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

# புல்வாமா தாக்குதலுக்கு காரணமான மசூத் அசாரை கறுப்புப் பட்டியலில் வைக்கவும்

### ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உலக நாடுகள் கோரிக்கை

(நியூயோர்க்)

புல்வாமா தாக்குதலுக்கு காரணமான பாகிஸ்தானின் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்பின் தலைவர் மசூத் அசாரை கறுப்புப் பட்டியலில் வைக்க ஐ.நா. பாதுகாப்பு சபையில் உலக நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

புல்வாமாவில் துணை இராணுவத்தினர் மீது பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத இயக்கம் நடத்திய தாக்குதல் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.



இந்தத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகை யில் பாகிஸ்தான் எல்லைக் குள் இந்திய விமானப்படை விமானங்கள் நுழைந்து, அங்குள்ள பயங்கரவாத முகாம்கள் மீது குண்டுவீசி தாக்குதல் நடத்தின.

இதில் 300 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக ஜெய்ஷ்-இ-முகமது இயக்க தலைவர் மசூத் அசாரின் மைத்துனர் உள்ளிட்ட முக்கிய பயங்கரவாத தளபதிகள் இந்த தாக்குதலில் கொல்லப்பட்டதாக தெரிகிறது.

இந்த நிலையில், பாகிஸ் தானை தலைமையிடமாக கொண்டு செயற்பட்டு வரும் ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் தலைவர் மசூத் அசாரை ஐ.நாவின் கறுப்புப் பட்டியலில் வைக்க உத்தரவிட வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியுள்ளன. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் பாதுகாப்பு அதிகாரிகள் குழு இலங்கையில் உயர்மட்டங்களுடன் பேச்சு





(கொழும்பு)

ரஷ்யாவின் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு பாதுகாப்பு உயர் மட்டங்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

இந்தக் குழுவில், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளான மேஜர் ஜெனரல் அலெக்சாண்டர் சின் சென்கோ கேணல் சேர்ஜி உர்சென்கோ, லெப்.கேணல் றோமன் போப்ரஸ், விக்டர் பெட்ரோவ், றோமன் செபுர் னொவ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுடன் ரஷ்ய தூதுவர் யூரி பொறிசோவிச் மற்றும் ரஷ்ய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் இலங்கை அரச உயர்மட்டங்களுடனான பேச்சுக்களில்கலந்துகொண்டுள்ளனர்

இவர்கள் நேற்று முன்தினம் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

அதன் பின்னர், இராணுவத் தலைமையகத்துக்கு சென்றிருந்த ரஷ்யக் குழுவினர் இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது, படையினரிடம் உள்ள ரஷ்ய தயாரிப்பு ஆயுத தளபாடங்களை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்துக் கொடுப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க இந்தக் குழு முன்வந்துள்ளது.

குறிப்பாக, இலங்கையின் கவசப்படைப்பிரிவு மற்றும் இயந்திர காலாட்படைப் பிரிவு, மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியல் படைப்பிரிவுகளில் உள்ள கவச வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்துக் கொடுப்பது குறித்து இந்தப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் நடக்கின்ற பயிற்சிகளில் இலங்கைப்படையினர் பங்கேற்கவும் இந்தக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தப் பேச்சுக்களின் போது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா அளித்த பங்களிப்புக்கு இராணுவத் தளபதி நன்றியைத் தெரிவித்துள்ளார். (இ-7)

### போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு

# தூக்குத் தண்டனைக்கு விசேட சட்ட ஏற்பாடுகள் வேண்டும் என்கின்றார் பேராசிரியர் நந்ததேரர்

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு விசேட நீதிமன்ற கட்டமைப்பொன்றை உருவாக்கி மக்கள் எதிர்பார்க்கும் தீர்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென பேராசிரியர் அகுரடியே நந்த நாயக தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். அதுபோன்று மிக இலகுவில் நீதிமன்ற தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தவும் முடியாது.

இதற்கு முன்னர் எப்போதும் இல்லாத வகையில் போதைப்பொருள் பாவனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் தேரர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் பேராசிரியர் அகுரடியே நந்த நாயக தேரர், கொடபல அமரகித்தி நாயக தேரர், கிவுலே கெதர நாரத நாயக தேரர், பல்லேகந்தே ரத்னசார அநு நாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் பலர் கலந்து கொண்டனர். (இ-7)

### சீன நிறுவனத்தின் வசமுள்ள

# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அமெரிக்கத் தூதுவர் ஆய்வு



(அம்பாந்தோட்டை)

அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தலைமையிலான அமெரிக்க அதிகாரிகள் குழு, சீன நிறுவனத்தின் வசமுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளது.

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை துறைமுகப் பகுதிக்கு ஆய்வுப் பயணத்தை மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர், அம்பாந்தோட்டை கடற்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி கொமடோர் அசோக விஜேசிறிவர்த்தனவைச் சந்தித்து பாதுகாப்பு ஒழுங்கமைப்புகள் குறித்து விசாரித்தார்.

-இந்தக் கலந்துரையாடலில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ஜெயந்த சில்வா, அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் டக்ளஸ் ஹெஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-7)

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சயாம் இரட்டையர்கள்

'நாங்கள் இரண்டு பேரும் இணை பிரியாத நண்பர்கள்!
ஈருடல் ஒருயிர் போல் பழகுகின்றோம்!'

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கின்றவர்கள் நிறையப்பேர் உண்டு. இந்த உலகத்திலே! ஆனால் நிஜமாகவே இணை பிரியாமல் கடைசி வரைக்கும் வாழ்ந்த இருண்டு பேர் உண்டு.

அவர்கள் தான் சயாம் இரட்டையர்கள்! இவர்கள் ஏன் இணை பிரியவில்லை... பிரிக்க முடியவில்லை! அவ்வளவுதான்! பிறக்கிற பொழுது ஒட்டிக் கொண்டே பிறந்து விட்டார்கள்! அறுவைச் சிகிச்சை செய்து இரண்டு பேரையும் பிரித்து விடலாம் என்று சில டாக்டர்கள் சொன்னார்களாம். இருந்தாலும் பெற்றவர்கள் இதற்கு சம்மதிக்கவில்லை!

சத்திரசிகிச்சை செய்தால் உயிருக்கு ஆபத்தாகப் போய்விடுமோ என்ற பயம்!

சரி அப்படியே இருக்கட்டும் என்று விட்டு விட்டார்கள். ஒரு பக்கத்து மார்பிலே இரண்டு பேரும் ஒட்டுக் கொண்டிருந்து விட்டார்கள்!

இரண்டு பேரையும் மார்பிலே இணைத்துக் கொண்டிருந்த தசைக்கு மேலே இருந்த இடைவெளி நாளுக்கு நாள் வளர்ந்ததாம்! அதனாலே இரண்டு பேரும் ஒருத்தர் தோள் மேலே ஒருத்தர் கையைப் போட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டார்களாம்!

தாய்லாந்து நாட்டிலே பாங்கொக்கிற்கு மேற்கே அறுபது மைல் தூரத்திலே ஒரு கிராமம். அதன் பெயர் மெக்லாங்! அங்கே மிதக்கின்ற படகிலே வசித்துக் கொண்டிருந்த ஒரு மீனவத் தம்பதியருக்கு 1811 மே மாதம் 11 ஆம் திகதி பிறந்த இரட்டைக் குழந்தைகள் தான் இவர்கள்! அந்த அம்மாவுக்கு ஏற்கனவே நான்கு குழந்தைகள்! ஐந்தாவது பிரசவத்திலே இந்த இரட்டைப் பிள்ளைகள்! இவர்களுக்குப் பெயர் என்ன தெரியுமா? சங் பங்கர்! யங் பங்கர்!

இரண்டு பிள்ளைகள் இப்படி ஒட்டிக் கொண்டு பிறந்த விடயம் நாடு பூராகவும் பரவியது! சயாம் நாட்டு மக்கள் இதை ஒரு கெட்ட சகுனமாக நினைத்தார்களாம்! அந்த நாட்டு ராஜாவுக்கு இது ஆகாது என்று கிளப்பி விட்டுட்டார்களாம்! இப்படி ஒரு சகுன பீதியினாலே இவர்களை கொன்றுவிட வேண்டும் என்றுகூட ஒரு யோசனை இருந்ததாம்! நல்ல வேளையாக அப்படி ஒன்றும் ஆகவில்லை!

இரண்டு பேரும் ஒட்டிக் கொண்டு இருந்தார்களே தவிர... குணத்திலே வித்தியாசம் இருந்தது! முதலில் இந்த உலகத்தைப் பார்த்தவர் சங் பங்கர். இவர் முன்கோபி. முரட்டுச் சுபாவம்! யங்பங்கர்-பரம சாது! அவர் என்ன செய்தாலும் இவர் பொறுத்துக் கொள்வார். ஒரு தடவை அவர்கள் இரண்டு பேருக்குமே சண்டை வந்து விட்டதாம். சங் யங்கை அடித்து காயப்படுத்தி விட்டாராம்!

தாயார் தான் வந்து சமாதானப்படுத்தி வைத்தார்களாம்! இரண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் அனுசரித்துப் போகவேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை என்பதை எடுத்துச் சொன்னார்களாம்! அதற்குப் பிறகு அவர்கள் சண்டை போட்டுக் கொள்வது இல்லையாம். ஒரு ஆங்கிலேய வியாபாரி இவர்களைப் பார்த்தார். இந்த அதிசயப் பிறவிகளை வைத்து கண்காட்சி நடத்தி பணம் சம்பாதிக்கலாம் என்று திட்டம் போட்டார்.

அவர்கள் அப்பா, அம்மாவிடம் கொஞ்சம் பணத்தை கொடுத்துவிட்டு அழைத்துக் கொண்டு போய்விட்டார். அமெரிக்காவிலே கண்காட்சி ஜோ ஜோ என்று நடந்தது. அதற்குப் பிறகு லண்டன், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து இப்படி ஏகப்பட்ட நாட்டுக்குப் போனார்கள். இவர்களை வைத்து மற்றவர்களுக்கு நல்ல வருமானம். 21 வயதிற்கு பின்னர் இவர்கள் சொந்தமாகவே கண்காட்சி நடத்தி நிறையச் சம்பாதித்தார்கள்!

1839 ஒக்டோபர் 12 ஆம் திகதி இரண்டு பேரும் அமெரிக்கா பிரஜையாகவே ஆகிவிட்டார்கள்! 1843 இல் நடந்த ஒரு நிகழ்ச்சி தான் அமெரிக்காவையே ஆச்சரியப்பட வைத்தது! ஆமாம்...இந்த இரட்டையர்கள் ஒரே சமயத்திலே இரண்டு பெண்களை கல்யாணம் செய்து கொண்டார்கள்!

கல்யாணத்திற்கு முன்னர் சத்திரசிகிச்சை செய்து பிரித்து விடலாம் என்று நினைத்தார்களாம். அப்படி செய்தால் உயிருக்கு ஆபத்து என்று டாக்டர்கள் சொன்னதாலே அந்த யோசனையை விட்டுவிட்டார்கள்! இரண்டு பேருக்குமே புல்லாங்குழல் நன்றாக வாசிக்கத் தெரியுமாம்! சங் பங்கர் சில சமயம் குடித்துவிட்டு உளறுவாராம். யங்பங்கர் தலைவிதியே என்று நினைத்து அதைக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருப்பாராம்! தூங்க நினைத்தாலும் அவர் விடமாட்டாராம்! இப்படியே காலம் தள்ளியிருக்கின்றார்கள்!

இரண்டு பேருக்கும் மொத்தம் 18 பிள்ளைகள் பிறந்ததாம்! இந்த இரண்டு பேரிலே யார் முதலில் இறந்தாலும் உடனே அந்த உடம்பை பிரித்து எடுத்துவிட வேண்டும். இல்லையென்றால் அடுத்தவர் உயிருக்கும் ஆபத்து என்று டாக்டர்கள் சொல்லியிருந்தார்களாம்.

ஆனால் இந்த சயாம் இரட்டையர்கள் இறந்தது எப்போ எங்கே? அப்படி என்கிறது இற்றைவரைக்கும் யாருக்குமே தெரியாத இரகசியமாகப் போய்விட்டது!அது போகட்டும். இப்பவும் கூட அது மாதிரி சில இரட்டையர்கள் உண்டு. ஒட்டிப் பிறக்கவில்லையென்றால் கூட ஒருத்தரை விட்டு ஒருத்தர் எப்பவும் பிரியாத அளவுக்கு நெருக்கமாக இருக்கிற சகோதரர்கள் உண்டு.

ஒரு ஊரிலே இப்படித்தான் இரண்டு பேர் இருந்தார்கள்... இரண்டு பேரும் இரட்டை பிள்ளைகள். இரண்டு பேர் முகச்சாயலும் ஒரேமாதிரி இருக்கும். வித்தியாசமே தெரியாது! இரண்டு பேரும் மிகவும் நெருக்கம். அண்ணன்காரன் தம்பியை விட்டுப் பிரியவே மாட்டான்! எங்கே போனாலும் ஒட்டிக்கொண்டே கூடவே போவான்!அவ்வளவு பிரியமா உன் தம்பி மேலே? என்று கேட்டார்கள்!

'அப்படி இல்லை! இவன் பாட்டுக்கு எல்லாரிடமும் கடன் வாங்கிக் கொள்கின்றான்! அவர்கள் எல்லோரும் என்னை தேடிக் கொண்டு வந்துவிடுகின்றார்கள்! அதுதான் இவனை தனியா விடுவதில்லை!' அப்படி என்றான் அண்ணன்காரன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெசாக் தினத்துக்கு முன்னர் கசிப்பு பாவனையை ஒழிப்பேன்

## அமைச்சர் மனோவிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் வெசாக் தினத்துக்கு முன் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தளை மாவட்டங்களில் கசிப்பு என்ற சட்டவிரோத கள்ளச் சாராய பாவனையை நிறுத்தித் தருகிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சர் மனோ கணேசனிடம் உறுதியளித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தின் போது, அமைச்சர் மனோ கணேசன், இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தளை மாவட்டங்களில் மற்றும் அவிசாவளை பிரதேசங்களில் கசிப்பு என்ற சட்டவிரோத கள்ளச் சாராய தயாரிப்பு, விநியோகம், பாவனை பற்றி கடும் விமர்சனத்தை முன்வைத்ததை அடுத்தே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன், இரத்தினபுரி பாம் கார்டன் தோட்டத்தில் ஒரு கொலை சில மாதங்களுக்கு முன் நிகழ்ந்தது. இதன் பின்னணி கசிப்பு வியாபாரமாகும். தோட்டங்களில் கசிப்பு வியாபாரத்துக்கு எதிராக நின்ற ஒரு தமிழ் இளைஞன் அடித்துக் கொல்லப்பட்டார். நான் நேரடியாக அங்கு சென்று பதற்றத்தை தணித்தேன்.

இல்லாவிட்டால் தோட்டத்து தமிழ் இளைஞர்கள் திருப்பி அடித்து இருப்பார்கள். அந்தத் தோட்டத்தில் தொடர்ந்து பதற்றம் நிலவியதால் அங்கு ஒரு பொலிஸ் இரவு, பகல் பணியில் இருக்கும் முழுநேர காவலரணை ஸ்தாபிக்கும்படி நான் இரத்தினபுரி பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கும் நான் கூறி இருந்தேன். காவலரணுக்கு தேவையான இடத்தையும் தோட்ட நிர்வாகம் இங்கே கொடுத்து இருந்தது. இங்கே பொலிஸ் காவலரண் அமைக்க முதலில் அதற்கு ஒப்புக்கொண்ட பொலிஸ்மா அதிபர் இன்று வரை அதைச் செய்யவில்லை. இன்னொரு கொலை இங்கே நடந்தால் அதற்கு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பொறுப்பு ஏற்க வேண்டும்.

இந்த கூட்டத்துக்கு அவர் வரவில்லை. வெளிநாடு போய் விட்டாராம். பதில் பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன இங்கு இருக்கிறார். பூஜித ஜயசுந்தர இங்கு இருப்பாரெனில் என்னிடம் நன்றாக வாங்கிக்கட்டி இருப்பார். அவரை திட்டவே நான் இங்கு வந்தேன்.

இந்தப் பிரச்சினையை உங்கள் கவனத்துக்கு அமைச்சரவையிலேயே நான் கொண்டு வந்து இருக்க முடியும். ஆனால், இங்கு இந்த பாதுகாப்பு அமைச்சு கூட்டத்தில் இராணுவ பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் இருப்பார்கள் என்பதாலேயே நான் இங்கே வந்து இதை எல்லோருக்கும் கேட்கும் முறையில் சொல்கிறேன். நான் சொல்வதை பொலிஸ் அதிகாரிகள் கவனமாக கேட்க வேண்டும்.

இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தளை மாவட்டங்களில் மற்றும் அவிசாவளை பிரதேசங்களில் கசிப்பு என்ற சட்டவிரோத கள்ளச் சாராய வியாபாரம், தோட்டத் தொழிலாளர்களை குறிவைத்து நடைபெறுகிறது. இதில் சட்டவிரோத கள்ளச் சாராயம் காய்ச்சும் உற்பத்தியாளர்கள், கீழ்மட்ட பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் உடன்பாடு இருக்கிறது. தோட்டங்களில் இந்த சாராயத்தை விநியோகிக்கும் தரகர்கள் உள்ளார்கள். கடனுக்கும் விற்பனை செய்கிறார்கள். ஆண்களும், பெண்களும் குடித்து சாகிறார்கள். அவர்களது தேக ஆரோக்கியம் சீர் கெடுகிறது. தோட்ட அதிகாரிகளும் இதைக் கண்டு கொள்வதில்லை. தொழிலாளர்கள் உழைக்கும் வரை வாழ்ந்துவிட்டு பிறகு செத்தால் போதும் என அவர்கள் நினைக்கிறார்கள் என நான் நினைக்கிறேன்.

சிங்களக் கிராமப் பகுதிகளில் இத்தகைய கசிப்பு என்ற சட்டவிரோத கள்ளச் சாராய வியாபாரம் நடைபெற்றால் நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு பொலிஸ் அதிகாரிகள் தோட்டத் தொழிலாளர்களை குறிவைத்து நடைபெறும், சட்டவிரோத கள்ளச் சாராய பாவனையைத் தடுக்க முன்வருவதில்லை. இது ஏன்?

நாட்டில் இன்று போதைவஸ்து வியாபாரத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நீங்கள், தோட்டத் தொழிலாளர்களை குறிவைத்து நடைபெறும் இந்தக் கசிப்பு என்ற சட்டவிரோத கள்ளச் சாராய வியாபாரத்தை நிறுத்த வேண்டும்.

இதற்குப் பதிலளித்த, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் மனோ கணேசன் சொல்வதில் மிகுந்த உண்மைகள் உள்ளன. தேசிய மட்டத்தில் போதைவஸ்து உலகை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொலிஸ் துறை, அமைச்சர் கூறிய பிரதேசங்களில் கசிப்பு வியாபாரத்தை நிறுத்த வேண்டும். போதைவஸ்து உலகை ஒழிக்கும் விசேட பிரதி பொலிஸ்மா அதிபர் லத்தீப், எதிர்வரும் வெசாக் தினத்துக்கு முன்னர் கசிப்பு வியாபாரம் மற்றும் பாவனையையும் முற்றாக இந்நாட்டிலிருந்து துடைத்து எறிய வேண்டும். இது நிச்சயம் நடக்கும் என நான் அமைச்சருக்கு உறுதியளிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குவைத்திலிருந்து 52 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

## பாரிய தொந்தரவுகளுக்குள்ளானதாக புகார்



(கொழும்பு)

குவைத்தில் பணிப்பெண்களாக கடமையாற்றிய 52 பேரை நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் அனுப்பி வைத்துள்ளது.

குறித்த பணிப்பெண்கள் கடமையாற்றிய வீடுகளில் பாரிய தொந்தரவுக்கும் பிரச்சினைக்கும் உள்ளான நிலையில் நேற்று அவர்கள் தாய் நாடு திரும்பியுள்ளனர்.

குறித்த பெண்கள் நேற்றுக் காலை 6.35 மணியளவில் குவைத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகைதந்துள்ளனர்.

குறித்த பெண்களின் 6 பேர் இருவருடங்களுக்கு மேலாக குவைத்தில் பணிபுரிந்ததோடு, ஏனைய பெண்கள் அனைவரும் ஒருவருடத்திற்கு குறைவாக பணிப்பெண்களாக கடமையாற்றியதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த பெண்கள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன், குறித்த பெண்கள் குவைத்தில் பணிபுரிந்த காலத்தில் எவ்வித கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை என தெரியவந்துள்ளது.

இந்நிலையில், குறித்த பெண்கள் தங்கியிருந்து பணிபுரிந்த வீடுகளில் அடித்து துன்புறுத்தப்பட்டதாகவும் தொந்தரவுக்குள்ளானதாகவும் குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்துக்கு அறிவித்துள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த பெண்களில் எட்டுப் பேரைத் தவிர ஏனைய 44 பேர் தற்காலிகமான கடவுச்சீட்டை பயன்படுத்தி இலங்கை வந்துள்ளதுடன் 35 பெண்கள் தமது சொந்தப் பணத்தை செலவழித்து கடவுச்சீட்டை பெற்று இலங்கை வந்துள்ளனர்.

இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குவைத்திலிருந்து வந்த பணிப் பெண்கள் அவர்களின் ஊருக்குச் செல்வதற்கான கொடுப்பனவுகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையின் போதைப்பொருள் ஒழிப்புக்கு சவுதி ஆதரவளிக்கும்

(கொழும்பு)

போதைப் பொருளை அழிப்பதற்கு இலங்கை மேற்கொள்ளும் போராட்டத்துக்கு சவுதி அரசாங்கம் ஆதரவளிக்கும் என கிழக்கு ஆசிய நாடுகளுக்குரிய முஸ்லிம் உலக லீக்கின் ஆலோசகர் கலாநிதி அஹமட் ஹமாத் ஜிலான் தெரிவித்தார்.



நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சவுதி அரேபியாவிலிருந்து வருகைதந்திருந்த இவர், மேல்மாகாண ஆளுநர் அஸாத் சாலியை மாகாண அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அனைத்து சமூகத்தினருடனும் சமாதான சுகவாழ்வு ஏற்படுவது அவசியமானது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், இலங்கை அரசாங்கம் போதைப் பொருளை ஒழிப்பதற்கு மேற்கொள்ளும் போராட்டத்துக்கு முஸ்லிம் உலக லீக் (MWL) ஆதரவளித்து, இலங்கையில் கல்வியை ஊக்குவிப்பதாக உறுதியளித்தார்.

சவுதி இளவரசர் முகம்மது பின் சல்மான் ஏனைய அனைத்து மதங்களையும் மதிப்பதன் மூலம் மிதமான பாதையை பின்பற்றி வருகிறார். இஸ்லாம் சகல இனங்களுக்கிடையே சகிப்புத்தன்மையையும் சமரசத்தையும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நம் புகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது மேல்மாகாண ஆளுநர் நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினார். (இ-7)

# மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு விரைவில் வீடுகள் வழங்கப்படும்-வடிவேல் சுரேஷ் உறுதி

(பதுளை)

பதுளை அலகொல்ல தோட்டத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து கொடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் உறுதியளித்துள்ளார்.



பாதிக்கப்பட்ட மக்களுக்கும், இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. குறித்த சந்திப்பின்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேசத்திற்கு உட்பட்ட அலகொல்ல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு அபாயத்தை தொடர்ந்து அப்பகுதியை சேர்ந்த 45 குடும்பங்கள் கடந்த 2014 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர்.

குறித்த பகுதியானது தற்போது மண்சரிவு அபாயம் கொண்ட பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, அவர்களுக்கு புதிய வீடுகள் அமைப்பதற்கு பொருத்தமான காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில், குறித்த விடயம் இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

அதன்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிக விரைவில் வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வர்த்தக நிலையங்களுக்கு செவ்வாயன்று விடுமுறை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நெல்லியடி வாணிபர் கழகம் எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் யாவற்றிற்கும் சிவராத்திரிக்கு மறுதினமான 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடுமுறை என நெல்லியடி வாணிபர் கழகம் அறிவித்துள்ளது. (5-7)

# சீனப் பிரஜைகள் 14 பேர் கைது

(காலி)

காலி-தடெல்ல பகுதியில் விசாயின்றி தங்கியிருந்த சீனப் பிரஜைகள் 14 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 22 முதல் 56 வயதிற்கு இடைப்பட்ட சீனப் பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்! ஐ.ம.சு.கூ. மாகாணசபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

பாலியல் குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தென் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

'ரத்தரன்' என்று அறியப்படும் கிரிசாந்த புஷ்பகுமார என்பவரே பொலிஸாரால் நேற்று வியாழக் கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

16 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

# வடக்கில் கடந்த வருடம் 18 சிறுவர்கள் தத்தெடுப்பு

## ஆணையாளர் விஸ்வரூபன் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலிருந்து கடந்த வருடம் 18 சிறுவர்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்த நன்னடத்தை சிறுவர் பராமரிப்புசேவைகள்திணைக்கள வடமாகாண ஆணையாளர் ரி.விஸ்வரூபன், சமூகப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி, வளர்ந்த பிள்ளைகளை தத்தெடுப்பதற்கு முன்வருவோர் எண்ணிக்கை குறைவாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணததில உள்ள சிறுவர் இல்லங்களை மூடி இல்லங்களில் உள்ளசிறுவர்களை பெற்றோருடன் இணைப்பது எமது நோக்கம். போருக்குப் பின்னர் அதிகமாக வடக்கு மாகாணத்தில் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள சிதைவு காரணமாக பிள்ளைகள் சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்படுகிறார்கள்.

கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணத்தின் அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லத்தில் தற்போது 32 பிள்ளைகள் உள்ளார்கள். குறித்த இல்லத்தை மீளக் கட்டுமானம் செய்ய வேண்டிய தேவை உள்ளது.

பிள்ளைகளை தத்தெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட பின்னர் தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.அவர்கள் சில நாட்கள் தங்கியிருக்க வேண்டும். அதனால் இட வசதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும் இங்கு அடிப்படை வசதிகள் பற்றாக் குறை காணப்படுகிறது. இதனால் நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும்.

எனவே ஜனாதிபதி செயலகத்தின் கீழ் உள்ள சிறுவர் பாதுகாப்பு பகுதி ஊடாக கடந்த வருடம் 4.8 மில்லியன் பெற்று அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இந்த வருட அபிவிருத்திக்கு 100 மில்லியன் அரசிடம் கோரியுள்ளோம். அதற்கான வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளோம். இதில் குறிப்பாக 75 மில்லியன் ரூபாய் சிறுவர் பொறுப்பேற்கும் இல்லத்தை அமைப்பதற்கு கோரியுள்ளோம்.

கடந்த வருடம் சிறுவர் இல்லத்தில் இருந்து 14 பிள்ளைகள் உள்ளூரிலும் 4 பிள்ளைகள் வெளிநாட்டுக் குமாக 18 பிள்ளைகள் தத்தெடுக்கப்பட்டுள்ளார்கள். கடந்த 2017 ஆம் ஆண்டு 23 பிள்ளைகள் தத்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இதைவிட நீதிமன்றங்களூடாகவும் தத்தெடுக்கப்படுகிறார்கள்.

பிள்ளைகளை தத்தெடுப்பதற்கென 200 க்கும் அதிகமான விண்ணப்பங்கள் எம்மிடம் உள்ளது. அதே எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் மேலதிகமாக உள்ளன அவற்றுக்கு இன்னும் நேர்முகத் தேர்வு நடைபெறவில்லை.

வடக்கு மாகாணத்திலுள்ள சில சமூகப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி வளர்ந்த பிள்ளைகளை தத்தெடுப்பதற்கு தயக்கம் காட்டுகின்றனர். பிறந்த உடன் குழந்தையை தத்தெடுக்கவே பலர் விரும்புகிறார்கள். அது பிள்ளையின் எதிர்காலத்தைப் பாதிக்கும். என்றோ ஒருநாள் பிள்ளைக்கு உண்மை தெரிய வரும் நிலையில் அது பிள்ளையின் மனநிலையை அதிகமாக பாதிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பள்ளிவாசலில் தொழுது கொண்டிருக்கையில் சரிந்து விழுந்த முதியவர் மூச்சுத்திணறி மரணம்

(ஏறாவூர்)

பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் மூச்சுத்திணறி சாய்ந்த நிலையில் மரணித்த சம்பவம் ஏறாவூர் ஜாமியுல் அக்பர் ஜும்மாப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.




நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு நேர இஷாத் தொழுகையின்போதே இச் சம்பவம் இடம் பெற்றது. ஏறாவூர் அல்முனீறா பெண்கள் பாடசாலை வீதியை அண்மித்து வசித்து வந்த உமர்லெப்பை மஹ்மூது லெப்பை என்ற 76 வயது முதியவரே இவ்வாறு மூச்சுத் திணறி மரணித்துள்ளார்.

இச் சம்பவம் பள்ளிவாசலின் சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது. (இ-7)

# இந்திய தேசம் ஒன்றாக வாழ்ந்து ஒன்றாகப் போரிட்டு ஒன்றாகவே வெல்லும்

## பிரதமர் மோடி உணர்ச்சிகரம்



(சென்னை)

இந்தியா ஒன்றாக வாழும், ஒன்றாக வளரும், ஒன்றாகப் போரிட்டு ஒன்றாகவே வெற்றிபெறும் என்று பிரதமர் மோடி உணர்ச்சிகரமாகப் பேசினார்.

புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இந்திய விமானப் படை பாகிஸ்தானின் பாலகோட்டில் உள்ள தீவிரவாத முகாம்களில் தாக்குதல் நடத்தியது.

இதற்குப் பதிலடியாக நேற்று முன்தினம் பாகிஸ்தான் இந்திய எல் லையில் தாக்குதலில் ஈடு பட்டது.

அப்போது பாகிஸ்தானின் எப்-16 ரக விமானத்தை இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியது.

இதற்கிடையே பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்குள் சென்ற இந்திய மிக் ரக விமானங்களை அந் நாட்டு ராணுவம் சுட்டு வீழ்த்தியது.

இதனிடையே மோடி தலைமையில் நேற்று அவசர ஆலோசனை நடத்தப் பட்டது. இதற்காக இளைஞர் தின நிகழ்ச்சியில் பங்கேற்ற மோடி, நிகழ்ச்சியை பாதியில் இரத்து செய்து விட்டு, ஆலோசனையில் பங்கேற்றார்.

இந்நிலையில் நேற்று பா.ஜ.க. பூத் பொறுப்பாளர்களுடன் மோடி வீடியோ கான்பரன்சிங் மூலம் பேசினார்.

அப்போது அவர், ""எதிரி (பாகிஸ்தான்) நம்மை நிலைகுலைய வைக்க முயற்சிக்கிறான். தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

அவர்கள் நமது வளர்ச்சியைத் தடுக்க ஆசைப்படுகிறார்கள். நாட்டு மக்களாகிய நாம் அனைவரும் அவர்களின் கொடிய திட்டங்களை முறியடிக்க வேண்டும்.

நாம் அனைத்துத் துறைகளிலும் கடினமாக உழைக்க வேண்டும். நம் தேசத்தைக் காப்பவர்கள் அனைவரிடமும் இந்தியா நன்றியுடன் இருக்கிறது. அவர்கள் அங்கிருப்பதால் தான், தேசம் அதிவேக வளர்ச்சியை அடைய முடிகிறது.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 2014 வெற்றி பயன்பட்டது.

2019 தேர்தல் வெற்றி (பா.ஜ.கவின்) மக்களின் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக இருக்கும்" என மேலும் தெரிவித்தார்.(7)

# தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்துமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக் களத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருவோர் கச்சேரி நல்லூர் வீதியின் இரு பக்கங்களிலும் வாகனங்களை நிறுத்துவதால் பலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்.கச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு சேவையைப் பெற்றுக் கொள்ளவரும் பயனாளிகள் தமக்கென ஒதுக்கப்பட்ட வாகனப் பாதுகாப்புத் தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்தாமல் வீதி ஓரங்களிலும், வீட்டு வாசல்களுக்கு முன்னரும் வாகனங்கள் நிறுத்துவதால் வீட்டு உரியமையாளர்களும் வீதியால் செல்வோரும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாவதாகத் தெரிவித்தனர்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் யாழ்.மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடம் கேட்ட போது குறித்த விடயம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் ஒருவரால் தன்னிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதாகவும் அது தொடர்பில் மாவட்டச் செயலாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தியதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வாகனத் தரிப்பிடங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் வாகனங்கள் நிறுத்துமாறு அறிவுறுத்தல்களை காட்சிப்படுத்தியும் உரியவர்கள் அறிவுறுத்தல் களைப் பின்பற்றுவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# நமக்கு மற்றுமொரு போர் தேவையில்லை; பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுங்கள்

## 'நோபல்' மலாலா வேண்டுகோள்



(இஸ்லாமாபாத்)

நமக்கு மற்றுமொரு போர் தேவையில்லை என்றும் இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுங்கள் என்று அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும்விதமாக இந்திய விமானப்படை பாகிஸ்தானின் பாலகோட்டில் உள்ள தீவிரவாத முகாம்களில் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக நேற்று முன்தினம் காலை, பாகிஸ்தான் இந்திய எல்லையில் தாக்குதலில் ஈடுபட்டது.

இந்த நிலையில் இதுகுறித்து மலாலா தனது டுவிட்டர் பக்கத்தில் நோபல் பரிசு பெற்றவர், யூனிசெஃபின் அமைதிக்கான தூதர் என்ற முறையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு இடையில் எல்லையில் பதற்றம் அதிகரித்து வருவதால்எல்லையில்வசிக்கும் மக்கள் மீது அக்கறை கொண்டு நான் இதை கூறுகிறேன். அனைவருக்கும்போரின் கொடுமைகள் தெரியும். பழி வாங்குவது நல்ல பதிலடி தாக்குதலாக ஒரு போதும் இருக்காது. போர் ஆரம்பித்து விட்டால் அது அபூர்வமாகத்தான் முடியும். பல இலட்சணக்கான மக்கள் போரினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

நமக்கு மற்றுமொரு போர் தேவையில்லை. தற்போது போரின் ஆபத்தில் சிக்கியுள்ள மக்களை இந்த உலகம் கண்டுகொள்ளவில்லை.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானும், இந்திய பிரதமர் மோடியும் கடினமான நேரங்களில் உண்மையான தலைமைப் பண்பை காண்பிக்க வேண்டும். இருவரும் அமர்ந்து பேசி, கைகுலுக்கி பேச்சுவார்த்தை மூலம் தற்போதுள்ள மோதல் மற்றும் காஷ்மீர் பிரச்சினையை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உயிரிழப்புகளை தவிர்க்க இந்தியா - பாகிஸ்தான் பேச்சு வார்த்தையை சர்வதேச சமூகம் ஆதரிக்க வேண்டும்.

இரு நாடுகளின் குடிமக்களுக்கும் அவர்களது எதிரி தீவிரவாதம், படிப்பறிவின்மை, ஏழமை என்று நன்கு தெரியும். இரு நாடுகளும் அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

183





“1889 இல் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியா சாலையில் இந்து மகா சபை என்ற தலைப்பில் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது.தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சைவக் கோயில்களின் நிர்வாகத்தையிட்டுக் கலந்து ரையாடுவது இம்மாநாட்டின் நோக்கமாக இருந்தது. மற்றைய நிகழ்வு இராமகிருஷ்ண பரமஹம்சரின் பக்த ரான சுவாமி விவேகானந்தர்1897 இல் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தமையாகும்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நிகழ்ந்த இலங்கைத் தமிழ்ச் செயற்பாடுகளில் இச்செல்வாக்கு மிக வெளிப்படையாக உள்ளது. எனவே இந்தியாவினது சமய, கலாசார, மொழி உணர்வுகள் இலங்கை தமிழர்களின் சமயம், கலாசாரம், மொழி ஆகிய உணர்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியதுமன்றி இக்காலகட்டத்தில் உருவான தமிழ்த் தேசியவாதத்தையும் வலிமைப்படுத்தியது என்ற முடிவுக்கு வர இடமளிக்கின்றது.

நாவலரால் 1853 இல் உருவாக்கப்பட்ட சைவப்பிரகாச சபை, சைவக் கருத்தியல்களை விருத்தி செய்வதற்கும் அந்நிய சக்திகளிடத்திலிருந்து சைவ சமயத்தைப் பாதுகாக்கவும் தன்னை அர்ப்பணித்த முதலாவது சமய சபையாகவிருந்தது.

கே.எம்.டி.சில்வா தனது University of Ceylon , History of Ceylon என்ற நூலில் பின்வருமாறு சொல்கின்றார்.

1853 ஆம் ஆண்டிலிருந்து சைவப்பிரகாச சபையை ஆறுமுகநாவலர் நிறுவி பின்னர் வண்ணார்பண்ணை சிவன் கோவில் மண்டபத்தைத் திறமையுடன் பயன்படுத்தி ஒவ்வொரு வெள்ளியன்றும் தனது பிரபலமான உரைகளை அங்கு நிகழ்த்தினார்.

இவருடைய செல்வாக்கு சைவசமயத்தை அபிவிருத்தி செய்வதற்கான சைவபரிபாலன சபை (1888) தோன்றுவதற்குக் காரணமாகவிருந்தது.

இச்சபையின் அங்கத்தவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் கற்றவர்களாகவும் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராம கிருஷ்ண பரமஹம்சர், வேதாகம சங்கம் என்ற சக்திகளினால் உருவான இந்து சமய மறுமலர்ச்சியின் ஆழமான செல்வாக்கிற்கு ஆட்பட்டவர்களாகவும் இருந்தனர்.

சைவபரிபாலன சபையையிட்டு நாம் ஆராயப் புகுமுன் இக்காலகட்டத்தில் இதே நோக்கங்களுக்காக வேறு சில சைவத்தமிழ் சபைகளும் சங்கங்களும் இயங்கியமை பற்றி இங்கு சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

கிறிஸ்தவமத கண்டன சபை, பரமபத கண்டன சுயமத தாபன சங்கம் போன்ற கிறிஸ்தவ எதிர்ப்பு அமைப்புக்கள் போன்றவற்றை நாம் ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம்.

சைவ பரிபாலன சபை (1888) இற்கு முன்னர் நாவலரின் குறிக்கோள்களைப் பகிர்ந்து அவற்றைத் தொடர்ந்திடும் பல்வேறு சைவத் தமிழ்ச் சங்கங்கள் இருந்தன.

சைவ அபிமானிகள் சங்கம், சைவ சித்தானந்த சபை, சைவ கலாவிருத்திச் சங்கம், சைவ சித்தாந்த மத சமாஜம் என்பன இவையாகும். இவையாவுமே பல்வேறு வழிகளில் சைவத் தமிழ் கல்வி, கலாசார, மொழி என்பவற்றை மேம்படுத்தி விருத்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டன.

ஆயினும் யாவற்றிலும் அதிக பலமானதும் முக்கியமானதுமாக இருந்தது சைவபரிபாலன சபையாகும். இது 1888 இலிருந்து தனது செயற்பாடுகளை இலங்கையின் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களிலும் தெற்கிலும் குறிப்பாக கொழும்புக்கும் விஸ்தரித்தது.

சைவபரிபாலன சபை தோற்றுவிக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் சம்பவித்த இரு வரலாற்று நிகழ்வுகளை இங்கு குறிப்பிடுவது பயன்தரலாம். 1889 இல் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் இந்து மகாசபை என்ற தலைப்பில் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது.

இங்கு யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் 1500 இற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றினர் எனக் கணிப்பிடப்பட்டது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சைவக் கோயில்களின் நிர்வாகத்தையிட்டுக் கலந்துரையாடுவது இம்மாநாட்டின் நோக்கமாக இருந்தது.

மற்றைய நிகழ்வு இராமகிருஷ்ண பரமஹம்சரின் பக்தரான சுவாமி விவேகானந்தர் 1897 இல் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தமையாகும். சுவாமி விவேகானந்தரை சைவத்தமிழ்ச் சமூகம் சிறந்த முறையில் வரவேற்றது.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் நடந்த கூட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பல்வேறு தமிழ்ப் பிரதேசங்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இரண்டு மைல் தூரத்திற்கு கடல்போல் ஒரே தலைமையாகத் தோன்றியது என இந்து ஓகன் பத்திரிகை செய்தி வெளியிட்டதுடன் பின்வருமாறும் தெரிவித்தது.

உன்னதமான பந்தலொன்று முன்னால் நிறுவப்பட்டிருந்த துடன் விசேடமாக பெரிய கடையிலிருந்து வரும் பாதையின் அந்தப் பகுதி அலங்கரிக்கப்பட்டும் ஒளியூட்டப்பட்டும் காணப்பட்டது. வீதியின் இருமருங்கும் நூற்றுக்கணக்கான வாழைகள் நாட்டப்பட்டு வழிமுழுவதுமே தோரணங்களினாலும் கொடிகளினாலும் அழகு செய்யப்பட்டிருந்தது.

இவ்விரு நிகழ்வுகளுக்கும் சைவத்தமிழ்ச் சமூகம் அளித்த பாரிய ஆதரவு அவர்களுடைய சமயம், கலாசாரம் என்பவற்றைப் பிரதானப்படுத்தும் நிகழ்வுகளில் அவர்கள் காட்டிய பெரும் ஊக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

சைவசமயம், கலாசாரம் தோற்றிய தேசியவுணர்வு உச்சத்தை எட்டி அது சமூக, அரசியல் அரங்குகளில் பிரவாகிக்க இருந்ததை இது வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. இக் கூற்றை சைவபரிபாலசபை பற்றிய ஆய்வு சான்று பகர்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மீது சி.ஐ.டி.விசாரணை

(கொழும்பு)

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்யலங்கார உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் சிலருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் சிலர், சந்தேக நபர்களுக்கு இரகசியங்களை வெளியிட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே, இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சிலர் அண்மையில் திடீரென வசதி படைத்தவர்களாக மாறியுள்ளது குறித்தும் விசாரிக்கப்படவுள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்யலங்கார மற்றும் அவருக்கு நெருக்கமான அதிகாரிகளை விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைத்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரவி வைத்யலங்காரவை அந்தப் பதவியில் இருந்து நீக்க கடந்த 26 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மிக் போர் விமானக் கொள்வனவு தொடர்பான விசாரணைகள் குறித்த இரகசியங்களை சிங்கப்பூரைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களுக்கு வெளியிட்டார் என்று அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி 16ஆம் திகதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்யலங்கார திடீரென சிங்கப்பூருக்கு மேற்கொண்ட இரகசியப் பயணத்தை அடுத்தே, இந்த தொடர்புகள் அம்பலமாகியுள்ளன. (இ-7)

# நல்லாட்சியை அனைவரும் வெறுக்கத் தொடங்கிவிட்டனர்

## மகிந்தானந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நல்லாட்சியைக் கொண்டு வந்த அனைவரும் அரசாங்கத்தை வெறுத்துள்ளதுடன், அதனை விமர்சிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே, மகிந்தானந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2015, ஜனவரி மாதம் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் தோல்வியடைந்த அரசாங்கம் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட தெரிவித்துள்ளார்.

அவர் மட்டுமன்றி முன்னாள் அமைச்சர்கள், தற்போதைய அமைச்சர்கள் என அனைவரும் இந்த அரசாங்கத்தை விமர்சிக்க தற்போது ஆரம்பித்துள்ளார்கள்.

இதிலிருந்தே இது மக்கள் விரோதமான அரசாங்கம் என்பது நன்றாகத் தெரிகிறது. அரச சொத்துக்களை விற்பனை செய்வது, தேர்தலை பிற்போட்டுக் கொண்டிருப்பது, வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளமை என பல்வேறு சவால்கள் எம் முன்னால் இருக்கின்றன.

இந்தநிலையிலேயே, நாம் இதற்கொதிராக போராட்டம் நடத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

இதற்கு கண்டியிலிருக்கும் அனைவரும் கலந்து கொண்டு, இதனை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இதனை நாம் மார்ச் மாதத்துடன் நிறுத்திக் கொள்ள மாட்டோம். அந்த வகையில், டிசெம்பர் மாதம் வரை 10 போராட்டங்களை நடத்த நாம் திகதிகளை குறித்துள்ளோம்.

இறுதிப் போராட்டமானது, கதிர்காமத்திலிருந்து கொழும்பு வரையான பேரணியாக இடம்பெறவுள்ளது.

பொறுத்தது போதும் என்ற தொனிப் பெருளிலான இந்தப் போராட்டமானது, அரசாங்கத்தை வெளியேற்றும் முக்கியமான போராட்டமாக இருக்கும் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை" என மகிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார். (இ-7)

# 1990 சுவசெரிய சேவை மத்திய மாகாணத்திலும்




(ஹற்றன்)

"1990 சுவசெரிய" வைத்தியசாலைக்கு முன்னரான சிகிச்சை சேவை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மத்திய மாகாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையுடன், 2016 ஜூலை மாதம் 29 ஆம் திகதி மேற்கு மற்றும் தென் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டது 1990 சுவசெரிய சேவை.

இந்தச் சேவை 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வட மாகாணத்திற்கும், ஓகஸ்ட் மாதத்தில் ஊவா மாகாணத்திற்கும், செப்டெம்பர் மாதத்தில் வட மத்திய மாகாணத்திற்கும், ஒக்டோபர் மாதத்தில் வட மேல் மாகாணத்திற்கும், 2019 ஜனவரி மாதம் முதல் சப்ரகமுவ மாகாணத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் தற்போது இந்தச் சேவையானது மத்திய மாகாணத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொள்ள சகல வழிகளிலும் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உயிர்களைப் பாதுகாக்கும் இந்த மாபெரும் நடவடிக்கையை நாடு முழுவதும் வாழும் இலங்கை மக்கள் அனைவருக்கும் பெற்றுக் கொடுக்க எம்மோடு கைகோர்த்துக் கொள்ளுமாறும் அழைப்பு விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1657

### சசி

நமக்குப் பிடித்தவர்கள் நம்மைக் காயப்படுத்தும் போதுதான் இல்லாதவற்றையும் இழந்தவற்றையும் பற்றி ஆழமாக யோசிக்கத் தோன்றும்



### சங்கீத்

வயது: 10
மிஞ்சு வயதில உனக்கு Love கேட்குதா?

வயது: 10-18
படிக்கிற வயதில என்ன Love?

வயது: 18-25
உருப்படியா ஒரு Job இல்ல அதுக்குள்ள உனக்கு Love கேட்குதா?

வயது: 25-33
கழுதை வயசில என்ன Love?

அப்ப நாங்க எப்பதான்டா Love பண்றது

### வசந்

உன்மேல் அன்பு செலுத்துகிறவர்களை நேசி, உன் மீது கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி



### கவிசனா

எனது வெற்றி என்பது உடனடியானது அல்ல, ஆனால் நிச்சயமானது



### லதுமி

நம்ம குரங்குக்கு குரங்குன்னு பேரு வச்சிருக்கிற மாதிரி குரங்கும் நமக்கு ஏதாச்சும் பேர் வச்சிருக்குமல்லே



### குணா

கஷ்டத்திலும் நேர்மையாக இரு... நீ ஏமாற்றப்பட்டாலும் பிறரை ஏமாற்றாதே... உன் நம்பிக்கை உன்னைக் கைவிடாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் அமரதுங்க சிறந்த அரசியல்வாதி

## ஜனாதிபதி மைத்திரி பாராட்டு



(கொழும்பு)

அரசியல்வாதிகள் நீண்ட காலமாக அரசியலில் தாக்குப் பிடிப்பதற்கு மக்கள் சேவையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதும் மக்களின் நன்மதிப்பைப் பெறுவதும் அவசியம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சுற்றாடல் அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் 40 ஆண்டு கால அரசியல் வாழ்க்கை பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற விழாவில் கருத்துத் தெரிவிக்கின்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்வாதி என்ற வகையில் மக்கள் நேய பணிகளில் ஈடுபட்டு தனது பணியை சிறப்பாக ஆற்றிவரும் ஜோன் அமரதுங்க, நீண்ட கால அனுபவமுடைய சிறந்த அரசியல்வாதி என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அவர் வழங்கிய ஒத்துழைப்பையும் ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் சேவையை பாராட்டிய ஜனாதிபதி நினைவுப் பரிசில் ஒன்றையும் வழங்கினார்.

சட்டத்தரணியான ஜோன் அமரதுங்க 1978ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் வத்தளை தொகுதியின் பிரதான ஒருங்கிணைப்பாளராக அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்ததுடன், இராஜாங்க அமைச்சர், அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர் என்று பல முக்கியமான பொறுப்புக்களை வகித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் கரு ஜெயசூரிய ஆகியோர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, விசேட விருந்தினர்கள் உள்ளிட்ட அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் குடும்ப உறவினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# வெளிநாடுகளில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது

## பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த 8 வருடங்களில், வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்று பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தோரின் எண்ணிக்கை கணிசமாக குறைவடைந்துள்ளதாக பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வெளிநாடுகளுக்கு தொழில் நிமிர்த்தமாகச் சென்று அங்கு துன்பங்களை அனுபவிப்போரின் எண்ணிக்கை தற்போது பாரியளவு குறைவடைந்துள்ளது.

வெளிநாடுகளில் துன்பங்களுக்கு முகம்கொடுக்கும், இலங்கையர்களை காப்புறுதித் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு கொண்டுவரவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதுதொடர்பில், அரசாங்கம் எனும் ரீதியில் நாம் அனைத்து விதமான செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம். இதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவும் நாம் அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம்.

2010 இல் இருந்து, மத்திய கிழக்கு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் இலங்கையைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள் என்று அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்களின்பிரச்சினையை நாம் ஆராய்ந்து தீர்வுகளையும் நாம் முன்வைத்துள்ளோம்.

இதனால், 2018 ஆம் ஆண்டில் 2 ஆயிரமாக குறைவடைந்துள்ளது. எம்மைப் பொறுத்தவரை இந்த எண்ணிக்கையை முழுமையாக குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதே பிரதான நோக்கமாகும்" என மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (இ-7)

## ட்ரம்ப் - கிம் சந்திப்பில் எந்த ஒப்பந்தமும் எட்டப்படவில்லை




(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் சந்திப்பில் எந்த ஒப்பந்தமும் எட்டப்படவில்லை என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. வடகொரிய ஜனாதிபதி கிம், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கலந்து கொண்ட உச்சி மாநாடு வியட்நாம் தலைநகரம் ஹனோயில் கடந்த இரண்டு நாட்கள் நடந்தது.

கிம் உடனான சந்திப்பு குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறும்போது, "வியட்நாமில் நடக்கும் இந்த முக்கியமான உச்சி மாநாடு குறித்து நாங்கள் நன்றாகவே உணர்ந்திருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சாரா கூறும்போது, "மிகவும் நல்ல மற்றும் ஆக்கபூர்வமான சந்திப்பு இது. அணு ஆயுதங்களை அழித்தல், பொருளாதாரம் ஆகியவற்றை முன்னெடுக்கப் பல வழிகள் குறித்துப் பேசினோம். எந்த ஒப்பந்தமும் இந்தச் சந்திப்பில் எட்டப்படவில்லை. ஆனால் இரு நாடுகளின் குழுக்களும் எதிர்காலத்தில் சந்திக்க எதிர்நோக்கி உள்ளன"எனத் தெரிவித்தார். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 220 | 250 |
| தக்காளி | 50 | 40 | 50 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 | 80 |
| கோவா | 60 | 40 | 50 | 60 | 60 |
| கரட் | 100 | 90 | 100 | 80 | 140 |
| பூசணி | 50 | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 85 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 60 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 90 | 60 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 35 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 280 | 250 | 400 |
| போஞ்சி | 80 | 70 | 70 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 35 | 60 | 100 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 60 | 100 | 70 | 55 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 140 | 100 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 60 | 60 | 60 | 60 | 100 |
| முள்ளங்கி | 30 | 50 | 70 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 20 | 30 |
| ஈரப்பலா | [illegible] | [illegible] | 60 | 100 | 80 |

# செய்தித்துளிகள்

## மகள் மருமகன் சண்டையில் தலையிட்ட தந்தை மரணம்

(அங்குணுகொலபெலஸ்ஸ)

அங்குணுகொலபெலஸ்ஸ - அவாரியகம பிரதேசத்தில் ஏற்பட்ட முறுகல் நிலையின் போது தள்ளிவிடப்பட்டதில் கீழே விழுந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார். தனது மகளுக்கும், மருமகனுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையை சமரசப்படுத்துவதற்காக இவர் தலையிட்ட போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முரண்பாட்டின் போது மருமகனால் தள்ளி விடப்பட்டு கீழே விழுந்து மயங்கியுள்ளார். பின்னர் அங்குணுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இச் சம்பவத்தில் 64 வயது நபரே உயிரிழந்துள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## 65 துப்பாக்கிகள் மீட்பு 58 பேர் இதுவரை கைது

(மொனராகல)

ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகல ஆகிய இரு மாவட்டங்களிலும் இவ் வருட முதல் இரு மாதங்களில் 65 சட்டவிரோத துப்பாக்கிகளும் அதற்குரிய சன்னங்கள் பெருந்தொகையுடன் மீட்கப்பட்டு 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பதுளை மாவட்டத்தில் 43 துப்பாக்கிகளும் மொனராகல மாவட்டத்தில் 22 துப்பாக்கிகளுமாக 65 சட்டவிரோத துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

## ஏவுகணை மாதிரிகள் மைத்திரியிடம்



(கொழும்பு)

இலங்கையில் முதன்முறையாக தயாரிக்கப்பட்டுள்ள மல்ரி பரல் ரொக்கெட் லோன்சர் மற்றும் ஏவுகணை மாதிரிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த கால யுத்த அனுபவங்களைப் பயன்படுத்தி, பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தால் உருவாக்கப்பட்டுள்ள நாட்டின் முதலாவது மல்ரி பரல் ரொக்கெட் லோன்சர் மற்றும் ஏவுகணை கடந்த 71 ஆவது தேசிய தின விழாவின்போது காட்சிப்படுத்தப்பட்டது.

ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பிரிகேடியர் கலாநிதி டிரான் டி சில்வா இதை ஜனாதிபதியிடம் கையளித்தார். (இ-7)

## மகரகமவில் பொலிஸ் கான்ஸ்டபிள் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை

(மகரகம)

மகரகம பொலிஸ் நிலைய வளாகத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது உத்தியோகபூர்வ துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்றுக்காலை குறித்த பொலிஸ் நிலையத்தின் சிற்றுண்டிச்சாலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவரது மரணம் தொடர்பில் மகரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## அலுக்கோசு பதவிக்கு 45 பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

மரணதண்டனையை நிறைவேற்றும் அலுக்கோசு பதவிக்கு இதுவரை பலர் விண்ணப்பித்துள்ளனர்.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மரணதண்டனை நிறைவேற்றப்படும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டையடுத்து மரண தண்டனையை நிறைவேற்றும் "அலுக்கோசு" பதவிக்கு விண்ணப்பங்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் கோரப்பட்டிருந்தன.

இந் நிலையில் அலுக்கோசு பதவிக்கு இதுவரை 45 பேர் விண்ணப்பித்துள்ள நிலையில், அதில் வெளிநாட்டுப் பிரஜையொருவரும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோபக்கார முனிவர்



பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு காட்டில் சுதீவர் என்ற முனிவர் கடும் தவம் செய்து வந்தார். அந்தப் பக்கம் வந்த இரு காட்டுவாசிகளில் ஒருவன், திடீரென மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டான். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த மற்றொருவன், தவத்திலிருந்த முனிவரை எழுப்பி உதவி கேட்டான்.

தன் தவம் கலைந்த கோபத்தினால் முனிவர் காட்டுவாசியை சாம்பலாகப் போகும்படி சபித்தார். அந்தக் கணமே அந்தக் காட்டுவாசி எரிந்து சாம்பலாக, மயக்கம் தெளிந்து எழுந்த மற்றொருவன் தனது சகாவின் நிலையைக் கண்டு கதறியழுதான்.

இதற்குள் கோபம் தணிந்த முனிவரிடம், மற்றொரு ஆள் சாபத்தை நீக்குமாறு வேண்ட, "எனக்கு சாபம் கொடுக்கத் தெரியுமே தவிர, சாபத்திலிருந்து மீட்கத் தெரியாது. நான் என் குரு சுசாந்தரிடம் அதைக் கற்று வருகிறேன். நீ அதுவரை உன் நண்பனின் சாம்பலை பத்திரமாகப் பாதுகாத்து வா!" என்று சொல்லிவிட்டு தன் குருவைத் தேடிச் சென்றார் சுதீவர்.

தன் குருவிடம் சென்று நடந்தவற்றை விளக்கி பரிகாரம் கேட்டார்.

குரு சுசாந்த முனிவர் "மனிதனின் முதல் விரோதி அவனது கோபம்தான். நீ கொடுக்கும் சாபத்தினால் உன் தவ வலிமை குறைந்து விடும். உன் தவ வலிமை முழுவதும் தியாகம் செய்தால் உன் சாபத்தைத் திரும்பப் பெறலாம்!" என்றார். அதற்கு இணங்காமல் வேறு யோசனை சொல்லும்படி கேட்டார்.

"சுதீவா! விஷ்ணுபுரத்தில் மாதவன் என்ற புண்ணியாத்மா இருக்கிறான். அவன் இல்லறத்தில் இருப்பவன். அவனிடம் சென்று அவன் புண்ணியத்தில் ஒரு பகுதியை தானமாகப் பெற்றுக்கொள். அதைக் கொண்டு அந்தக் காட்டுவாசியை உயிர்ப்பிக்கலாம்!" என்றார்.

சுதீவர் அந்த மாதவனைத் தேடிச் சென்றார். செல்லும் வழியில் மிக அழகான ஒரு இளம் பெண் தென்பட்டாள். அவள் அழகிலே கிறங்கிப் போய் அவளையே உற்றுப் பார்க்க, அதனால் கோபமடைந்த அந்தப் பெண், "முனிவரான நீ என் போன்ற பெண்ணை இப்படி உற்றுப் பார்க்கலாமா? உனக்கு வெட்கமாக இல்லையா?" என்று கேட்டதும், சுதீவருக்குக் கடுங் கோபம் உண்டாயிற்று.

"அடி பெண்ணே! உன் அழகினால் தானே உனக்கு இவ்வளவு கர்வம்? நீ அழகற்ற அவலட்சணமான பெண்ணாக மாறுவாய்!" என்று சபிக்க அந்தப் பெண்ணும் அவ்வாறே மாறி விட்டாள்.

பிறகு சுதீவர் விஷ்ணுபுரத்தை அடைந்தார். வழியில் ஒரு இளைஞனிடம் மாதவனது வீட்டுக்கு வழி கேட்டார்.

ஆனால் அவன், "மாதவனுடைய பெண் மிக அழகானவள். அதனால்தான் அவன் வீட்டுக்கு வழி கேட்கிறாயா? உன்னைப் போன்ற முனிவருக்கு இது தேவையா?" என்று திமிராகக் கேட்டான். அவனை ஊமையாக வேண்டும் என்று சுதீவர் சபித்து விட்டு ஒருவாறு மாதவனின் வீட்டைக் கண்டு பிடித்தார்.

சுதீவரை மாதவன் வரவேற்று அமரச் செய்தார். "என் குருவான சுசாந்தர் தங்களை ஒரு புண்ணியவான் என்றார். நீங்கள் அப்படி என்ன தவம் செய்து, என் குருவே புகழும்படி புண்ணியம் சம்பாதித்தீர்கள்?" என்று கேட்டார்.

"காலையில் எழுந்து என் நித்திய கடன்களை முடித்து விட்டு, வீட்டு வேலைகளிலும் வெளி வேலைகளிலும் பங்கேற்கிறேன். எல்லாருக்கும் என்னாலான உதவிகளைச் செய்கிறேன். கோபம், பொறாமை, ஆசை இவற்றை விட்டொழித்து மனதினாலும் வாக்கினாலும் உடலினாலும் பலருக்கும் நன்மை புரிகிறேன்!" என்றார் மாதவன்.

பூஜை, புனஸ்காரம், தவம் இவை எதுவுமே செய்யாமல் இவனுக்கு எப்படி புண்ணியம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் சுதீவர், "நீங்கள் கடவுளை தியானம் செய்வது கிடையாதா?" என்றார்.

"கடவுள் என்னிலும் இருக்கிறார். மற்றவர்களிடமும் இருக்கிறார். சகல உயிர்களிலும் உறைகிறார் அவரைத்தனியாகபூஜையோ, தியானமோ ஏன் செய்ய வேண்டும்? மற்றவர்களுக்கு உதவி செய்தாலே, அது கடவுளுக்காக செய்யப்படும் பூஜை, தியானம், தவம் அனைத்தும் ஆகும்!" என்றார் மாதவன். சுதீவருக்கு மாதவன் தன்னை ஏளனம் செய்கிறார் எனத் தோன்றியது.

"நீர் நான் செய்யும் தவமெல்லாம் வீண் வேலை என்று பொருள்படக் கூறுகிறீரா?" என்று கோபத்துடன் சுதீவர் கேட்டார்.

"சுவாமி! நான் உங்களைப் பற்றியோ, உங்கள் தவத்தைப் பற்றியோ குறை கூறவில்லை. நான் என்னுடைய கருத்தைக் கூறுகிறேன்!" என்றார் மாதவன் பணிவுடன்.

கோபத்துடன் குதித்து எழுந்தார் சுதீவர். "உன்னைப் போன்ற நாஸ்திகனை மன்னிக்கவே கூடாது. இந்த நிமிடத்திலிருந்து நீ கண்பார்வை இழந்து நடக்க முடியாமல் படுக்கையில் வீழ்வாய்!" என்று சாபமிட்டார்.

ஆனால், மாதவனுக்கு ஒன்றுமே ஆகவில்லை. மீண்டும் மாதவன் பணிவுடன், "சுவாமி! சாந்தம் அடையுங்கள். உங்களைப் போன்ற மகான் கோபம் அடையும்படி நான் பேசியது தவறுதான்!" என்று மன்னிப்புக் கேட்டார். "மாதவா! என் சாபம் உனக் குப் பலிக்கவில்லை. நீ என்ன மகாத்மாவா?" என்றார் சுதீவர்.

"சுவாமி! அப்படியில்லை. காட்டுவாசி, அழகான இளம் பெண், வழியில் கண்ட இளைஞன் ஆகியோருக்கு சாபம் கொடுத்து தங்கள் தவ வலிமை நஷ்டமாகிவிட்டது. நான் மட்டுமில்லை, இனி நீங்கள் யாருக்கு சாபம் கொடுத்தாலும் அது பலிக்காது. போகட்டும் நீங்கள் என்னிடம் பெற வந்த புண்ணியத்தின் ஒரு பகுதியை உங்களுக்கு இப்போது நான் அளிக்கிறேன்.

"அந்தப் புண்ணியத்தினால் நீங்கள் சாபமிட்டவர்கள் எல்லாருக்கும் இந்தக் கணத்திலிருந்து சாபம் நீங்கிவிடும். உங்கள் தவ வலிமையை இந்த விநாடியிலிருந்து நீங்கள் மீண்டும் பெற்று விட்டீர்கள். நீங்கள் விரும்பினால் இப்போது எனக்கு சாபம் கொடுக்கலாம். அது பலிக்கும்!" என்றார்.

தனது செய்கைகளினால் அவமானம் அடைந்த சுதீவர் மாதவனுக்கு நன்றி கூறிவிட்டு மௌனமாக தன் குருவைத் தேடிச் சென்றார். வரும் வழியில், தான் சாபமிட்டவர்கள் மறுபடியும் தன் நிலைக்கு மாறி இருப்பதை அவர் கண்டார். தனது குரு சுசாந்தரிடம் நடந்தவற்றைக் கூறி அதற்கு விளக்கம் கேட்டார். "தவத்தினால் பல சக்திகளை அடையலாம். ஆனால், தன் கடமையைச் சிறப்பாக செய்பவனும் பிறருக்கு உதவி செய்வதையே இலட்சியமாகக் கொண்டவனுமான ஒரு மனிதன் ஒரு தவயோகியை விட அதிக புண்ணியம் செய்தவன் ஆகிறான்!" என்றார்.

"குருவே! இப்போது மாதவன் தான் செய்த புண்ணியத்தை தானம் செய்து விட்டான். ஆகையால் அவனுடைய சக்தியும் குறைந்து விடும் அல் லவா?" என்று சுதீவர் சந்தேகம் கேட்டார்.

"மற்றவர்களுக்காகத் தன் புண்ணியத்தையே தானம் செய்தால் அதுவே பெரிய புண்ணியம். மாதவனின் சக்தி குறையவில்லை. முன்பைவிட இப்போது அதிகமாகி விட்டது!" என்றார் சுசாந்த முனிவர்.

"குருவே! முன்பைவிட என் தவ வலிமையை அதிகமாக்குவேன். நான் மீண்டும் காட்டுக்குத் தவம் புரியச் செல்கிறேன்!" என்று கூறி விடை பெற்றார் சுதீவர். இனி அவர் கோபப்படுவார்னா நினைக்கிறீங்க குட்டீஸ்?

# பொது அறிவு

- மண்டேலா எப்பொழுது விடுதலை பெற்றார்?

**பெப்ரவரி 2, 1990 ஆம் ஆண்டு**

- மண்டேலா விடுதலை அடைந்தபோது அவருக்கு அகவை/வயது என்ன?

**71**

- அமைதிக்கான நோபல் பரிசு எந்த ஆண்டு வழங்கப்பட்டது?

**1993**

- மண்டேலா பெற்ற வேறு விருதுகள்?

**பாரத ரத்னா, அமைதி, நல்லிணக்கத்துக்கான மகாத்மா காந்தி சர்வதேச விருது**

- மண்டேலாவின் முழுப்பெயர்?

**நெல்சன்ரோபிசலா மண்டேலா**

# காந்தி மகாத்மா

காந்தியின் போதனை சத்திய சோதனை
என்றே அறிந்திடலாம் - அவர்
காட்டிய வழியில் நாட்டினர் நடந்தால்
இன்பம் அடைந்திடலாம்

சத்தியம் என்பது சாகாது என்றே
சொன்னவர் காந்திமகான் - அதை
நித்தியம் வாழ்வில் ஏற்பவர் அனைவர்க்கும்
தந்தை காந்திமகான்

அன்புடன் அகிம்சை சேர்ந்திட வேண்டும்
என்றே சொல்லிவைத்தார் - அதை
அனுதினம் அனைவரும் அன்புடன் ஏற்றிட
வழிதனை அள்ளிவைத்தார்

உண்மை என்னும் சொல்லின் வலிமை
புரிந்தது அவரால்தான் - அந்த
உண்மையின் வழியில் நடப்பவர் வாழ்வில்
விளைவது நலமேதான்

அன்புடன் வாழ்ந்த அவரது வாழ்வு
என்னும் அதிசயம்தான் - இந்த
அகிலத்து மாந்தர்கள் அதன்படி வாழ்வது
நாளும் அவசியந்தான்

பாரத தேசத்தின் தந்தை அண்ணல்
காந்தி மகாத்மாவாம் - இந்த
பாரது போற்ற, பார்த்தவர் வியக்க
வந்த மகாத்மாவாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்.

- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மணல் தட்டுப்பாடு குறித்து யாழ்.அரச அதிபரின் விளக்கம் என்ன?

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள மணல் தட்டுப்பாடு குறித்து வலம்புரி பல தடவைகள் எழுதியுள்ளபோதிலும் இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் எந்தப் பதிலோ அன்றி விளக்கமோ தெரிவிக்காமல் மௌனமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த மௌனம் எதற்கானது என்பது புரியவில்லை. மணல் தட்டுப்பாடு பற்றி விளக்கம் கொடுத்தால் அது தனது பதவிக்கு ஆபத்தைக் கொடுக்கலாம் என்று அவர் அஞ்சுகின்றாரோ என்று கூட எண்ணத் தோற்றுமளவுக்கு அவரின் மௌனம் இருக்கிறது.

பொது மக்கள் மணல் தட்டுப்பாட்டால் அலைந்து திரிகின்றனர். வீட்டுத்திட்டம் கிடைத்தவர்கள் கறுப்புச் சந்தையில் மணல் கொள்வனவை செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

எனினும் மணல் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் என்ன என்ற விளக்கத்தை யாழ்.மாவட்ட அரச அதிபர் வெளிப்படுத்தவில்லை.

உண்மையில் வீட்டுத் திட்டம் கிடைக்கப் பெற்றவர்களுக்குத் தேவையான மணல் விநியோகத்தை அந்தந்த பிரதேச செயலகங்கள் மேற்கொள்ள வேண்டும்.

பிரதேச செயலகங்கள் மணல் விநியோகத்தில் ஈடுபடுவது கடினமென்றால், அந்தந்தப் பிரதேச சபைகளோ, நகர, பட்டின, மாநகர சபைகளோ அந்தப் பணிகளைச் செய்தாக வேண்டும்.

இதுவும் சாத்தியமாகாதென்றால், மணல் மண்ணுக்கு விண்ணப்பித்தவர்களின் ஒழுங்கு வரிசையில் மணல் விநியோகத்தை மேற்கொள்வது அவசியம்.

அதேநேரம் மணல் விநியோகம் கிடைக்கப் பெற்றவர்கள் யார்? அவர்களின் விண்ணப்ப இலக்கம், ஊர், விலாசம் என்ற விபரங்களை பத்திரிகைகளில் வெளியிடுவது வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும்.

சுருங்கக்கூறின் முன்பு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு படையினரின் சிவில் அலுவலகத்தில் பயண அனுமதிக்கான விண்ணப்பம் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு கொடுத்த பின்பு பயண அனுமதி கிடைக்கப் பெற்றவர்களின் விபரத்தை படைத்தரப்பு பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தும்.

அந்த பயணத்துக்கான அனுமதி என்பது விண்ணப்பம் கிடைக்கப் பெற்ற ஒழுங்குமுறையில் வழங்கப்படும்.

இதேபோன்று மணல் மண்ணுக்கு விண்ணப்பம் கொடுத்தவர்களுக்கான மணல் விநியோகம் எப்போது நடக்கும் என்ற அறிவித்தலை ஒவ்வொரு மாவட்ட செயலகங்களும் அதிலும் குறிப்பாக யாழ்.மாவட்ட செயலகம் வெளியிட்டால் மணல் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

ஆனால் அவ்வாறான எந்த நடவடிக்கையும் இல்லை எனும்போது மணல் விநியோகத்துக்குத் தடை விதிப்பது யார் என்ற கேள்வி எழும்.

என்ன செய்வது யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவுகின்ற மணல் தட்டுப்பாடு வேறு எந்த இடத்தில் நடந்தாலும் அந்தந்த மாவட்ட செயலகங்கள் முடக்கப்பட்டிருக்கும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக இடமாற்ற வேண்டுமென்ற கோஷம் வெடித்திருக்கும். சமூக அமைப்புக்கள் பொதுநல வழக்கைத் தாக்கல் செய்திருக்கும்.

ஆனால் இது யாழ்ப்பாணம். அதிலும் போரில் எல்லாவற்றையும் இழந்து கவலையுடன் வாழுகின்ற மக்கள். அவர்களை எவ்வளவும் அலைக்கழிக்கலாம் அவர்கள் கைகட்டி, வாய் பொத்தி நிற்பார்கள்.

இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அப்பாவித் தமிழ் மக்களின் தலையில் சம்பல் அரைக்கின்றனர்.

ஆம், தட்டிக்கேட்க ஆளில்லை என்றால் இதுதான் நிலைமை.

### இலங்கை அரசு தொடர்பில்

# ஐ.நா சபை எடுக்க வேண்டிய தீர்மானம் தொடர்பான கலந்துரையாடல்

பொதுஅமைப்புக்களை ஒன்றிணைத்து இலங்கை அரசு தொடர்பில் ஐ.நா சபையில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை அறிவிக்கும் மாபெரும் மாநாட்டுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது எனவும், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கிடைக்கும் வகையில் சர்வதேச விசாரணை இடம்பெறவேண்டும் என்பதை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபை தீர்மானங்கள் இடம்பெறவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களின் ஏற்பாட்டில், பொது அமைப்புக்களை ஒன்றிணைத்துமாபெரும் மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

குறித்த மாநாட்டுக்கான முன்னாயத்த கலந்துரையாடலில் நாட்டிலுள்ள பொது அமைப்புக்கள், மதகுருமார்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், பல்கலை மாணவர்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்குமாறு வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்களின்மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-9)

### சமூக நல பயிற்சிப் பட்டறையும்

## போதையற்ற ஆரோக்கியமான வாழ்வு சம்பந்தமான கருத்தரங்கும்

இந்தியாவின் பிரபல சமூக ஆர்வலரும் பல்வைத்திய நிபுணருமாகிய பத்மஸ்ரீ விஜயகுமார் சாகா மற்றும் சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்பாளர்களும் கல்வியலாளர்களும்கலந்துகொண்டு நடத்தும் மாபெரும் சமூக பயிற்சிப் பட்டறை மற்றும் சுற்றுச்சூழல் தேசிய ஒருமைப்பாட்டுடன் கூடிய போதை அற்ற ஆரோக்கியமான வாழ்வு சம்பந்தமான கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கே.கே.எஸ்.வீதி தட்டாதெரு சந்திக்குஅருகாமையில்உள்ள பரமானந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் நிறைவில் பெறுமதியான சர்வதேசதரத்திலான சான்றிதழ்கள் வழங்கப்படும். மேற்படி பயிற்சி பட்டறை இலவசமாக நடைபெறவுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 0784921635 என்ற தொலைபேசி எண்ணை அணுகவும். (ம)

## சட்டவிரோதமாக இலங்கை நாணயத்தாள்களை வெளிநாட்டுக்கு கொண்டுசெல்ல முயன்றவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கை நாணயத்தாள்களை சிங்கப்பூருக்கு கொண்டு செல்ல முயற்சித்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதி சுங்க ஊடகப் பேச்சாளர் பிபில மினுவான் பிட்டிய தெரிவித்தார்.

திருகோணமலை தம்பலகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 48 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இலங்கை நாணயத்தாள்களை சட்ட விரோதமான முறையில் சிங்கப்பூருக்கு எடுத்துச் செல்ல அவர் முயற்சித்துள்ளார்.

குறித்த பெண் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் சிங்கப்பூர் நோக்கிச் செல்லவிருந்த சிங்கப்பூர் விமான சேவைக்குரிய எஸ். கிவ் - 469 இலக்க விமானத்தில் பயணிக்கயிருந்தபோது விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கிய தகவலையடுத்து சுங்க அதிகாரிகள் அவரைக்கைது செய்தனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பிரதி சுங்க ஊடகப் பேச்சாளர் பிபில மினுவான்பிட்டிய மேலும் தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் பிரதேசத்தில** செம்பியன் பற்று, மாமுனை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மடுக்கந்தை, மகா மயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** நீராவிபுரம், கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் நாளை சனி காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** ஈவினை, சுதந்திரபுரம், குட்டியபுலம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** முல்லைத்தீவு நகரம், உன்னாப்பிலவு, கள்ளப்பாடு, செல்வபுரம், கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம், ஓஷன் Park ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மடுக்கந்தை, மகா மயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** நீராவிபுரம், கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## விசம் வைத்து பசு கொலை

(யாழ்ப்பாணம்)

பசு மாட்டிற்கு விஷம் வைத்து கொல்லப்பட்ட சம்பவம் வட்டுக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.

அராலி மத்தியில் உள்ள கால்நடை வளர்ப்பாளர் ஒருவரது ரூபாய் 45 ஆயிரம் பெறுமதியுள்ள பசுமாடு ஒன்று நேற்று முன்தினம் விசமிகளால் விஷம் வைத்து கொல்லப்பட்டுள்ளது.

இப் பசுவினை உரிமையாளர் கடந்த பதின்மூன்று வருடங்களாக வளர்த்து வந்துள்ளார்.

இந்த பசுவில் இருந்து நாளாந்தம் மூன்று லீற்றர் பால் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5-104)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

நாம் விலை கொடுத்து நம் பேருக்குப் பதிவு செய்து கொண்டுள்ள நம் வீட்டில் வாழும் பல்லி, எலி, பூனை, எட்டுக்கால் பூச்சி முதலியவை அந்த வீட்டைத் தமக்குச் சொந்தமாக எண்ணுகின்றன. அது போல் எல்லாம் இறைவனுடைமையாக இருக்க, அவற்றை நம்முடைய என்று மயங்குகின்றோம். என்னே நமது அறியாமை.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பாடுதல், எண்ணங்களைப் பரப்புதல், அகந்தை

சிலர் இசையை கேட்பதிலேயே சுகம் காண்கிறார்கள். சிலருக்குத் தனிமையில் இருக்கும் போது தான் பாடுவதில் மட்டும் சுகம் காண்கிறார்கள்.சிலர் பிறர் கவனத்தை ஈர்ப்பதற்கும் பிறரை கவர்வதற்கும் பாடுகிறார்கள்.சிலர் மட்டுமே மற்றவர்கள் எல்லோரும் பாடும் போது தானும் சேர்ந்து பாடுவதை விருமபுகறாாகள .இவை எலலாமே அகநதையலருநது வருபவை. பஜனை எனபது ஆனம பூாவமாகப பங்கு பெறுதல் .

நீ மற்றவர்களோடு சேர்ந்து பாட முடியுமென்றால் உன் அகநதை சிதறச சினனாபினனமாகிறது. குழநதைகளுக்கு அகந்தையில்லாததனால் எல்லோருடனும் சேர்ந்து பாட முடிகிறது. புதியவர்களுடன் சேர்ந்து பாட வேண்டுமானால் நீ அகந்தையில்லாமல் இருக்க வேண்டும். அகநதை நமமை புதயவாகளுடன சோநது பாட விடுவதில்லை.

அறிவு பூாவமான நிலை அகநதைககு பாதுகாபபு. இதய பூாவமான நிலை அகநதைகககு முடிவு காணகிறது ஆதம பூர்வமான நிலை அகந்தையை இல்லாததாகச் செய்கிறது. அகநதையனால எலலாத தொடாபுகளிலும இடைவெளி ஏற்படுகிறது.

பயிற்சி: நீ மற்றவர்களுடன் இருக்கும் போது அரட்டை அடிப்பதை விட்டுவிட்டு பாட ஆரம்பி அப்போது சக்தியில் ஏற்படும் மாற்றத்தை உணர்.இன்னும் அதிகமாக பழக்கத்தை விரும்பினால் புதிதாக சந்திக்கும் ஒருவரை நீ பாடினால் வரவேற்கலாம். (முற்றும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் இராசியில் இராகு-கேது ஒன்றாக சஞ்சரித்தால் என்ன செய்ய வேண்டும்?

**கன்னி**

கனனி ராசியல பறநதவரகளுககு நநதி யோகம ஏறபடுவது அவரகளுககு மிகபபெரிய பண இழபபிறகு வழிவகுக்கும். பெரிய கடன்சுமைக்கு ஆளாக நேரிடும். இநத பிரசசினைகளை சரி செயய நங்கள செயய வேண்டியது அனுமனை வழிபடவேண்டும். குறிப்பாக அதிகாலையில் வழிபடவேண்டும்.

**துலாம்**

துலாம ராசிககாரரகளுககு நநதி யோகம அவவளவு ஏற்றதல்ல. ஏனெனில் இதனால் அவர்களுக்கு கருவூட்டலில் பிரச்சினை, வம்சம் தழைப்பதில் பிரச்சினை போனறவை ஏற்படலாம். கருச்சிதைவு, மரணம் போன்ற பிரச்சினைகள் ஏற்படகூட வாய்ப்புள்ளது. குழந்தை பிறந்தாலும் அதிலும்பல சிக்கல்கள் இருக்கும். "ஓம்சம் சனீஸ் வராய நமஹ" என்னும் மந்திரத்தை 108 முறை தினமும் கூறினால் இந்த பாதிப்புகள் கொஞ்சம் குறையும்.


**விருச்சிகம்**

வருசசிக ராசிககாரரகளுககு சொதது தொடரபான பிரச்சினைகள் ஏற்படலாம். சொத்துக்கள் வாங்குவதில் பரசசினைகள பெருமபாலும ஏறபடும. சிலசமயம நதிமனறததிறகு அலைய கூட நேரிடலாம். இதனை சரி பண்ண செவ்வாய்க்கிழமைகளில் விரதமிருக்கவும். அதேபோல செவ்வாய்க்கிழமைகளில் அனுமனுக்கு சிவப்பு நிற பூக்களை வைத்து வழிபடவேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தவரோதய VS மகாஜன வீரர்களின் போர் இன்று ஆரம்பம்

## Skandavarodaya College



Standing 1st Row (L.R) : B.Ajinthan, D.Amirthasarathan, S.Danusraj, G.Nigarjan, K.Dilaxsan
Standing 2nd Row(L.R) : S.Hariharavathanan, T.Jesuran, S.Sobithan, L.Laxsan, S.Diluxsan, J.Kalistan, S.Dacksan, K.Reksan, S.Dansan
Seated : (L-R) : Mr.R.Rajakanthan (Prefect of Games), S.Pirasan (Vice Captain), Mr.M.Selvasthan (Principal), A.Thanusan (Captain) Mr.V.Umasuthan (Cricket Co - ordinator /MIC) Mr.S.Jasitharan(Coach)

## Mahajana College



Standing 1st Row (L-R) - A.Sivakaran, S.Sayanthan, S.varalaksan, L.Apoorvan, R.Thanistan
Standing 2nd Row (L-R) - U.Anithdevid , S.Silaksan, U.Matheesan, T.Rajinthan, S.Jamshan, T.Vanushan, S.Sathurjan, J.Jathurjan.
Seated (L-R) - T.bakeerathan (Master incharge), K.Kokolakanth (Cricket Co-odinator), K. mayilvakenam(P.O.G) , S.Bavan(Deputy Principal) , M.Bakeerathan (Captain M.Maniseharan (principal) ,R.Sujan (Vice Captain) ,V.Santhirasekaram (Deputy principal) K.Vasantharuban (Sports Co-odinator), R.Mathusan (Coach

### வீரர்களின் போருக்கு ஸ்கந்தா அதிபரின் வாழ்த்து



யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் யா/ மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான 19 ஆவது துடுப்பாட்டப் போட்டி 01.03.2019–02.03.2019 ஆகிய தினங்களில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வருடம் 125 ஆவது ஆண்டை மிகவும் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அதேவேளை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் துடுப்பாட்ட அணி உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதும் ஸ்கந்தா அன்னையின் வளர்ச்சியை தொட்டு நிற்கின்றது.

மிகவும் ஒழுக்கம், கட்டுப்பாடு வெற்றிக்கு அப்பால் ஒற்றுமை என்ற உணர்வோடு இரு கல்லூரிகளும் தங்கள் திறமைகளை வெளிக்கொணர இருக்கின்றன. அவ்வகையில் தமது ஆளுமைத் திறனை வளர்க்க இக்களம் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

"உண்மையே உயர் அறம்" என்ற மகுட வாக்கியத்திற்கு அமைய "கந்தையா" வள்ளலின் சிந்தையில் எழுந்த கல்லூரி வீரர்கள் மகாஜன வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டிட ஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

"ஸ்கந்தவரோதயன்"
மு.செல்வஸ்தான் அதிபர்
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

### மகாஜனக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



பத்தொன்பதாவது வருடமாக இம்முறை நடைபெறும் வீரர்களின் போர் நண்பர்களின் போர் துடுப்பாட்டப் போட்டியை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மாணவர்களிடையே புரிந்துணர்வு, ஒழுக்கம் போன்றவற்றை வளர்த்தெடுப்பதற்காகவும் வலிகாமத்தில் திறமை கொண்ட வீரர்களை உயர் நிலைக்கு முன்னேற்றுவதற்காகவும் இப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இதன்படியே இதுவரை மிகச் சிறப்பான முறையில் ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் இப்போட்டிகள் நடைபெற்று வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும். தொடர்ந்து இப்போட்டிகள் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப்பெருமானை வணங்கி நிற்கின்றேன்.

எம்.மணிசேகரன்
அதிபர் யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

**இடம்: யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்**
**காலம்: 01, 02.03.2019**
**நேரம்: காலை 8.30 மணிக்கு**

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அணிக்குமிடையிலான வீரர்களின் சமர் என வர்ணிக்கப்படும் இரண்டு நாட்கள் நீடிக்கும் கிரிக்கெட் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

2001 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதல் நான்கு ஆண்டுகளும் போட்டிகள் வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்தன. 2005 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதய கல்லூரி அணி வெற்றி பெற்றது. 2006, 2007 ஆம் ஆண்டு போட்டிகள், வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. 2008 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

அதன்பின் 2009 ஆம் ஆண்டுமகாஜனகல்லூரி அணியும் 2010 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதய கல்லூரி அணியும், 2011 ஆம் ஆண்டு மகாஜன கல்லூரி அணியும் வெற்றி பெற்றன. 2012 ஆம் ஆண்டிற்கான போட்டி வெற்றி, தோல்வியின்றி நிறைவடைந்தன. 2013 ஆம் ஆண்டு மகாஜன கல்லூரி வெற்றி பெற்றதுடன் 2014 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதய கல்லூரி வெற்றி பெற்றிருந்தது. 2015, 2016 ஆம் ஆண்டு போட்டிகளில் மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்றிருந்தது. 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டி வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்தது. கடந்த ஆண்டு மகாஜனக் கல்லூரியில் இடம்பெற்ற போட்டி வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்தது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி நான்கு தடவைகள் வெற்றி பெற் றது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி ஐந்து போட்டிக ளிலும் வெற்றி பெற்றுள்ளது.

ஏனைய ஒன்பது போட்டிகளும் வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்துள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் ஆகியோரின் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக தர்மலிங்கம் சித்தார்த்தன் (ஸ்கந்தவரோதயன் (Member of Founders-Family)&Mrs.Meena Sithadthan, சிறப்பு விருந்தினராக Mr.V.Muhunth an (Manager-Capital Alliance, Jaffna), கௌரவ விருந்தினராக Mr.S.Kumaran Match History (Renowned Teachers of Physics ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர்.

### ஸ்கந்தவரோதயா அணித் தலைவரின் கருத்து

தமது அணி துடுப்பாட்டத்தை முழுமையாக நம்பி களமிறங்கவுள்ளதென தெரிவித்த சுன்னாகம் ஸ்கந்தவரோதய அணித் தலைவர் அ.தனுஷன் தமது அணியின் அஜிந்தன், பிரசன், சோபிகன், கலிஸ்ரன் ஆகியோரின் துடுப்பாட்டம் சிறப்பாக அமையும் என கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், எமது வேகப்பந்து வீச்சாளர்களாக சோபிகன், டான்சன், அஜிந்தன் ஆகியோரும் சுழல் பந்து வீச்சாளர்களாக டிலக்ஷன், பிரசன், டனுஸ்ராஜ் ஆகியோரினது பந்துவீச்சுக்கள் அபாரமாக அமைந்துள்ளன. அதனைவிட தற்போது கடுமையான பயிற்சிகளுடன் எமது அணி களமிறங்கவுள்ளது. இருப்பினும் போட்டிகளின் நிலைதான் முடிவைத் தீர்மானிக்கும். எமது அணி பிரிவு 03 இல் சிறப்பாக விளையாடி தற்பொழுது பிரிவு இரண்டில் விளையாடிக் கொண்டிருக்கின்றது. ஸ்கந்தவரோதய கல்லூரியின் பயிற்றுநராக எஸ்.ஜசிதரன் மற்றும் பொறுப்பாசிரியராக வி.உமாசுதன், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக ஆர்.இராஜகாந்தன் ஆகியோர் செயற்படுகின்றனர். இவ் அணியின் வெற்றியினை பாடசாலை சமூகத்திற்கு அர்ப்பணிக்கின்றோம்.







### மகாஜனக் கல்லூரி அணித் தலைவரின் தகவல்

எமது அணி மிகுந்த பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. எனவே வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அணித் தலைவர் எம்.பஹிரதன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரி விக்கையில்,

சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக தனிஸ்டன், வரலக்ஷன், மதீஷன், கிருஷன் ஆகியோரும் வேகப் பந்து வீச்சாளர்களாக சதுர்ஷன், கிருஷன், சிவகரன், சுழல்பந்து வீச்சாளர்களாக சுயன், வரலக் ஷன் ஆகியோரின் பந்து வீச்சும், ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு சவாலாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். அதேபோல் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகளில் அவர்கள் சிறந்த பெறுபேறுகளைக் காட்டியுள்ளார்கள். எனவே வெற்றி என்பதை களம் தான் தீர்மானிக்கும். எமது கிரிக்கெட் அணிக்கு பயிற்றுநராக ஆர்.மதுஷன், பொறுப்பாசிரியராக ரி.பஹிரதன், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக கே. மயில்வாகனம் ஆகியோர் செயற்படுகின்றனர். இவ் அணியின் வெற்றியினை பாடசாலையின் ஆர்வலர்களுக்கும் சமூகத்தினருக்கும் சமர்ப்பிக்கின்றோம்.

**ஊடக அனுசரணை: வலம்புரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் யாப்பு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தகவல் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் (நேற்று) ஜனாதிபதி கூட்டம் ஒன்றை கூட்டி இருந்தார். கடந்த வாரம் இரா.சம்பந்தன், ஜனாதிபதியை சந்தித்து புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் முடக்கப்பட்டிருப்பது தொடர்பாகவும் நீண்டகாலமாக பல முயற்சிகளை எடுத்து இரண்டு அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி முன்வந்து அதனை செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தார்.

அதனால் ஜனாதிபதியும் பிரதமரும் சம்பந்தனும் கடந்த வாரமே ஒரு சந்திப்பை ஏற்படுத்தியிருந்தார்கள். அதன் பிரதிபலனாக 12 பேர் ஜனாதிபதியோடு கூட்டம் ஒன்றை நடத்தியிருக்கின்றோம்.

அதிலே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை பற்றி பேச்சுவார்த்ததை ஒன்று நடந்தது. ஆரம்பத்திலே ஜனாதிபதி மைத்திரி, இரா.சம்பந்தனை இந்தக் கூட்டத்துக்கான நோக்கம் என்ன என்று தெளிவாக எடுத்துரைக்கச் சொன்னார்.

அதனைப்பற்றி பேசிய பின்னர் புதிய அரசியலமைப்பில் இருக்கின்ற மூன்று விடயங்கள், அதாவது அதிகாரப் பகிர்வு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் மற்றும் தேர்தல் முறைமை ஆகிய விடயங்கள் குறித்து பேசப்பட்டது.

அதிலே அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக பெரியளவில் பிரச்சினைகள் இல்லாத காரணத்தினாலேயேயும் மற்ற இரு விடயங்கள் தொடர்பில் பலவிதமான கருத்து மோதல்கள் ஏற்பட்ட காரணத்தாலும் அதிகாரப் பகிர்வு சம்பந்தமான விடயத்தை முதலிலே முன்னெடுப்பதாக முன்மொழியப்பட்டது.

அதிலே என்ன விடயங்களை உடனடியாக செயற்படுத்தலாம் என்பது குறித்து அடுத்த வாரம் திரும்பவும் சந்தித்து அதனை அடையாளப்படுத்தி தகுந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுமந்திரன் தெரிவித்தார். (ம-3)

## அரசு செய்தது...

யல் தவறு என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

போர் காரணமாக கைது செய்யப்பட்ட படையினர் மட்டுமல்லாது விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை சம்பந்தமான யோசனையை மீண்டும் ஆராய்வது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 5 எம்.பிக்களின்...

படுத்த தன்னிச்சையாக முன்வந்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் தாரக பாலசூரிய, வாசுதேவ நாணயக்கார, எம்.ஏ.சுமந்திரன், விதுர விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சர் எரான் விக்கிரமரத்ன ஆகியவர்களே இவ்வாறு நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக முன்வந்துள்ளனர்.

இந்த வரலாற்று நிகழ்வில் உரையாற்றிய ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர,

இந்த செயற்பாடானது ஏனைய மக்கள் பிரதிநிதிகளையும் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிப்பதுடன் கேள்விகள் இன்றி பொது நலன் என்ற அடிப்படையில் தகவல்களை வழங்குவது அவசியம் என குறிப்பிட்டார். (ம-3)

## காணாமல்...

காணாமல் போனவர்களது முழுமையான விபரத்தினை தன்னிடம் வழங்குமாறு கோரியிருந்ததாகவும் அதற்கமைய நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் யாழ் மாவட்ட சங்கத்தின் சார்பில் ஆளுநரைச் சந்தித்து விபரங்களைக் கையளித்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர். (ம-3)

## அரசியல் தீர்வொ...

மர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆனால் பொருளாதாரத்தில் எவ்வாறு முன்னோக்கிச் செல்வது என்பது பற்றி சிந்தித்து செயற்பட வேண்டும். அது சவாலானதாக இருந்தாலும் கூட அதனை ஏற்று முன்னோக்கி பயணிக்க வேண்டும். அதுவே நாட்டின் தற்போதைய தேவையாகும் என்றார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் 30 வருட கால அரசியல் வாழ்வின் நிறைவினையொட்டி நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## உறவுகளுக்காக...

கள் காணாமல்போன தமது சொந்தங்களின் புகைப்படங்களுடன் தற்போதும் காத்திருக்கின்றனர்.

யுத்தத்திற்கு பின்னர் அதில் பாதிக்கப்பட்டவர்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அவர்கள் இழந்ததை மீளவும் வழங்க முடியாத போதும் அவர்களின் கருத்துக்களை காது கொடுத்து கேட்பதொன்றே அவர்களின் கண்ணியத்தை காப்பதாக அமையும் என ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் தெரிவித்தார்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவின் 30 வருட கால அரசியல் பயண பூர்த்தியை முன்னிட்டு நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, அமெரிக்கா, ஆகிய இரு நாடுகளுமே கடந்த காலங்களில் ஜனநாயக ரீதியான சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கிறது. இலங்கை கடந்த காலத்தில் பாரிய அரசியல் நெருக்கடி நிலையை எதிர் கொண்டிருந்தது. அப்போது மக்கள் வீதிகளில் இறங்கி ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு போராடினார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-3)

# வாள்வெட்டு குற்றச்சாட்டில் கைதான ஐவருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டு சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் பிணையில் விடுவிக்க மல்லாகம் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் புகுந்து 6 பேர் கொண்ட கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 8 பேர் கொண்ட கும்பல் ஒன்று பூட்டை உடைத்து வீட்டுக்குள் நுழைந்து அங்கு யன்னல் கண்ணாடிகள் உட்பட பெறுமதியான பொருட்களை உடைத்து அடாவடியில் ஈடுபட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

அந்தக் கும்பல் தப்பித்த வேளையில் வீதியில் விபத்து ஒன்றும் இடம்பெற்றது. அதிலிருந்து 8 பேரும் தப்பி ஓடியுள்ளனர்.

இதன் பின்னர் ஒருவாரமாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் ஐந்து பேர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்று மாலை மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலக்ஸ்ராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்தார். சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று சட்டத்தரணி மன்றுரைத்தார்.

தொடர்ந்தும் வழக்கு விசாரணையை மேற்கொண்டமாவட்ட நீதிபதி, விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்க உத்தரவிட்டதுடன், சந்தேகநபர்கள் ஐவரையும் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

இதேவேளை, உடுவில் அம்பலவாணர் வீதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைகளுக்கும் சந்தேகநபர்கள் ஆறு பேருக்கும் தொடர்புள்ளதா? என்பது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

# இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டனர்

## திம்புல்கும்புரே தேரர் ஒப்புதல்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்திற்கு இடையிலான மோதல்களில் பொது மக்களும் கொல்லப்பட்டதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மல்வத்து பீட அநுநாயக்க திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான பரஸ்பர புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ளும் நோக்குடன் மியன்மார் ஊடகவியலாளர்கள் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். அவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மல்வத்து மகா விகாரை பிரவின் அநுநாயக்கரை சந்தித்து ஆசி பெற்றனர்.

இதன்போதே அநுநாயக்கர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

இலங்கையில் 30 வருட யுத்தத்தினால் இரு தரப்பிலும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன. விடுதலைப் புலிகள் மக்களோடு மக்களாக இருந்து மறைந்திருந்து போர் செய்யும்போது, இலங்கைப் படையினரின் தாக்குதலில் புலிகளுடன் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். இதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால், ஆயுதம் ஏந்தி போராடிய விடுதலைப் புலிகள் மிகப்பெரிய அளவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர். இப்படி இருக்கையில், ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக போர்க்குற்றம் சுமத்தப்படுகின்றது.

உண்மையில் படையினருக்கும், சிங்கள மக்களுக்கும் எதிரான தாக்குதல்கள், மீறல்கள், இழப்புக்கள், மத்திய வங்கி உள்ளிட்ட பல தாக்குதல்கள் குறித்து யாரும் பேசுவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# புதிய அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வு பற்றிய யோசனையை முன்வைக்க

## சுமந்திரன், ராஜித, டிலான் பெரேரா உள்ளோர் அடங்கிய குழு நியமனம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் முக்கிய விடயங்களை ஆராய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் டிலான் பெரேரா உள்ளிட்டோர் அடங்கிய சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தக் குழு அமைக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தக் குழு அடுத்த கூட்டத்தின் போது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் முதலில் நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் முன்வைக்கவேண்டும் என கோரப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக முழு பாராளுமன்றமே அரசியலமைப்புச் சபையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் ஊடாக நிபுணர் குழு, உப குழுக்கள் அமைக்கப்பட்டு புதிய அரசியலமைப்புக்காக இடைக் கால அறிக்கை தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் எழுந்த சந்தேகங்களையடுத்து அதன் பணிகள் இழுபறியில் உள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இரவு முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ம-3)

கொவிசெத
திகதி 2019.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 2049
ஆங்கில எழுத்து Q
வெல்லப்பட்ட இலக்கங்கள் 30 31 60 67
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/02/28
சீட்டிழுப்பு இலக்கம் 3865
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 0 2 6 6 8
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/02/28
சீட்டிழுப்பு இலக்கம் 518
லக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 04 09 37 55 65
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1533 திகதி 2019/02/28
Y Q S
வெற்றி இலக்கங்கள் 21 25 53 72
போனஸ் இலக்கம் 05
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தமிழ் பொலிஸை...

நேற்று மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் புதிதாக 850 தமிழ் பொலிஸார்கள் இணைக்கப்படவுள்ளனர். 18 தொடக்கம் 28 வயதுக்கு இடைப்பட்ட 5 அடி 4 அங்குலம் உயரமுடைய இளைஞர். யுவதிகள் முன்வரவேண்டும்.

இலங்கையின் சனத்தொகை 2 கோடியே 30 இலட்சமாகும். இவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வெறுமனே 85 ஆயிரம் பொலிஸாரும், 10 ஆயிரம் விசேட அதிரடிப் படையினரும் உள்ளனர்.

இதனால் மேலதிக பொலிஸார் எமக்கு தேவையாக உள்ளார்கள். இன்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுடன் இணைந்து பொலிஸ்மா அதிபரை நான் சந்திக்க உள்ளேன். அவரிடம் இவ்விடயம் தொடர்பில் பேச உள்ளோம்என்றார். (ம-3)

அறைகள் வாடகைக்கு உண்டு

யாழ்/ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சென் பீற்றர்ஸ் லேனில் குளியலறையுடன் இணைந்த அறைகள் வாடகைக்கு உண்டு. மாணவமாணவியர்களுக்கு, உத்தியோகத்தர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0764541212, 0774725429, 0771967144
(7699)

காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(7570)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-5439)



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELs

தொடர் கருத்தரங்கு ஆரம்பம்
SLEAS / SLAS } Open / Ltd
பிரதி சனி - 9AM - 2.30 PM
வரி மதிப்பீட்டாளர் போட்டிப் பரீட்சை
புள்ளி விபரவியலாளர் போட்டிப் பரீட்சை
சனி - 9.00 AM - 2.00 PM
ஆரம்பம் 02.03.2019 சனி
By : P.கமல்தாசன்
மற்றும் துறைசார் வளவாளர்கள்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739
(7700)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# கேரளகஞ்சா...

யின் போது 42 கிலோ 50 கிராம் கேரள கஞ்சாப்பொதிகளுடன் ஒருவரை கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா சுமார் 42 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என தெரியவருகின்றது.

வடக்கு கடற்படை கட்டளை தலைமையக அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸார் இணைந்து மேற்கொண்ட குறித்த நடவடிக்கையின் போதே குறித்த கேரள கஞ்சாப்பொதி மீட்கப்பட்டுள்ளது.

மன்னார், புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-285)

# இந்திய விமானி...

பாராளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கான் கூறியுள்ளார்.

இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் விமானப்படை நேற்று முன்தினம் புதன் கிழமை தாக்குதல் நடத்தியபோது இந்திய - பாகிஸ்தான் போர் விமானங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டு, அதில் ஒரு இந்திய விமானம் வீழ்த்தப்பட்டதாக தகவல்கள் வெளியானது. அந்த வீழ்த்தப்பட்ட விமானத்தில் இருந்த இந்திய விமானப் படையின் விங் கமாண்டர் அபிநந்தன் வர்மாவை பாகிஸ்தான் தன் பிடியில் எடுத்தது.

முன்னதாக, அபிநந்தன் வர்மாவை ஒரு கும்பல் தாக்கும் படங்கள் வெளியாயின. பிறகு மாலை பாகிஸ்தான் வெளியிட்ட ஒரு காணொளியில் காபி அருந்தியபடி பேசும் அபிநந்தன், தம்மை பாகிஸ்தான் இராணுவம் மரியாதையாக நடத்துவதாகத் தெரிவித்தார்.

இதனிடையே அபிநந்தனை கண்ணியமாக நடத்தவேண்டும் என்ற குரல்கள் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் எழுந்தன. பிறகு, அபிநந்தனை விடுதலை செய்யவேண்டும் என்று இந்திய அரசு வலியுறுத்தியது. சமூக ஊடகத்திலும் இந்தக் கோரிக்கை எதிரொலித்தது.

இந்நிலையில், அபிநந்தனை விடுதலை செய்வதன் மூலம் போர்ப் பதற்றம் தணியும் என்றால் அவரை விடுதலை செய்யத் தயார் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி அறிவித்தார். இந்நிலையில்தான், பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் அவரை விடுதலை செய்யும் முடிவை அறிவித்தார் அந்நாட்டுப் பிரதமர் இம்ரான்கான்.

அமைதியின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரதமர் இம்ரான் கான் கூறியதையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் மேசையை தட்டி ஆர்ப்பரித்தனர். (ம-3)

# 7 மாத குழந்தை...

எழுவைதீவு இரண்டாம் வட்டாரத்தை சேர்ந்த ஏழு மாதங்களேயான அன்ரனி யூட் றொக்சன் என்ற குழந்தையே மேற்படி உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் குறித்த குழந்தைக்கு வயிற்றோட்டம் மற்றும் வலிப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனாவைத்தியசாலைக்கு பெற்றோர் குழந்தையை கொண்டு சென்றுள்ளனர்.

குழந்தையை பரிசோதித்த வைத்தியர் குழந்தை உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனாவைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த மரண விசாரணையை யாழ் போதனாவைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

# நெடுங்கேணியில்...

வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலய வளாகத்தில் வெடிக்காத நிலையில் இருந்த கைக்குண்டு ஒன்றை பொலிஸார் நேற்று அடையாளம் கண்டுள்ளனர்.

நெடுங்கேணி மகாவித்தியாலய வளாகத்தில் சந்தேகத்திற்கிடமான பொருள் ஒன்று இருப்பதை பாடசாலை நிர்வாகம் அவதானித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு விஜயம் செய்த பொலிஸார் கைக்குண்டினை அவதானித்துள்ளதுடன் அவ் இடத்தை பாதுகாப்பு பகுதியாக அறிவித்துள்ளனர். நீதிமன்ற அனுமதியின் பின்னர் குறித்த கைக்குண்டினை அப்பகுதியில் இருந்து அகற்றவுள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக குறித்த பாடசாலையில் சுற்றுசுவர் அமைப்பதற்காக தோண்டப்பட்ட குழியில் இருந்து குறித்த கைக்குண்டு வந்திருக்கலாம் என பாடசாலை நிர்வாகத்தினால் சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

# தமிழீழ விடுதலைப் புலிகள்...

மேலும் அமெரிக்காவில் நடந்த செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு முன்னதாகவே இந்துக்களான விடுதலை புலிகள் வீரியமான தற்கொலை தாக்குதல்முறைமையை பயன்படுத்தி இருக்கின்றார்கள் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் சிறைப்பட்டு இருக்கும் இந்திய விமானி அபிநந்தனை இன்று விடுதலை செய்வதாக பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கான் நேற்று வியாழக்கிழமை முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

குறித்த தீர்மானம் தொடர்பில் தொடர்ந்தும் உரையாற்றிய பாகிஸ்தான பிரதமர், இஸ்லாமிய தீவிரவாதிகள் தான் தற்கொலை தாக்குதல்களை மேற்கொள்வதாக இந்தியா தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றது. தீவிரவாதத்திற்கு மதம் கிடையாது. தற்கொலை தாக்குதல்கள் மதத்தின் பெயரால் நடப்பது இல்லை. அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதலுக்கு முன்னதாகவே உலக அளவில் வீரியமான தற்கொலை தாக்குதல்களை விடுதலை புலிகள் நடத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகள் சார்பில் தற்கொலை தாக்குதல் நடத்தியவர்கள் அனைவருமே இந்துக்கள். அவர்கள் மதத்தின் பெயரால் நடத்தவில்லை. மாறாக தங்களது விரக்தி மற்றும் கோபத்தின் விளைவாகவே அதனை செய்தனர் என இம்ரான் கான் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் வரலாற்றில் இம்ரான் கானின் நேற்றைய பாராளுமன்ற உரை வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒன்றாக சர்வதேச ரீதியில் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

FALC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.03.2019, செவ்வாய் 2.15 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் :06.03.2019, புதன் 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-5666)

A/L 2019 வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான
தொடர் கருத்தரங்கு [புதிய/பழைய பாடத்திட்டம்]
வணிகக்கல்வி
MR.S.K.பாலசுபேஷ்
B.Com(H.N.Dip-in-Acc)
Dip-in-Edu (ousl)
கணக்கீடு
MR.K.BALAKAJEN
B.Com(Jaf), H.N.Dip-in-Acc,
Dip-in-Edu (ousl), M.Com (Hons)
இடம் : NEC கல்வி நிறுவனம் (பிரதான மண்டபம்)
ஒவ்வொரு புதனும் 2.30 - 5.45 PM | ஒவ்வொரு வெள்ளியும் 2.30 - 5.45 PM
ஆரம்பம் : 06.03.2019 புதன் 2.30 PM | ஆரம்பம் : 08.03.2019 வெள்ளி 2.30 PM
● கருத்தரங்கானது 100 மணித்தியாலங்கள் நடைபெறும்
● இக்கருத்தரங்குகளில் பங்குபற்றி A/L 2018 இல் Rank 01 உட்பட முன்னணி பெறுபேறுகள்
● வெளி மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்
தொடர்புகளுக்கு : 0776740450, 0703396696
(7631)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வடமாகாண வரிமதிப்பீட்டாளர்
பிரதி சனி 9.00 – 3.00 மணிவரை
நீதிமன்ற பதிவாளர், புள்ளிவிபரவியலாளர்
பிரதி சனி 9.00 – 3.00 மணிவரை
SLEAS
SLAS
LLB
பிரதி ஞாயிறு 9.00 – 4.00
தொடர்புகளுக்கு : 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரிவீதி கொமர்ஷல் வங்கியருகில்)
(C-5651)

வேலையாட்கள் தேவை
சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண்/பெண் இருபாலாரும் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கணக்காளர் / பயிலும் கணக்காளர் : A/L கணக்கியலில் திறமைச் சித்தி பெற்றவர்கள் விரும்பத்தக்கது. (பாடசாலையில் இருந்து விலகிய ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)
வாகன சாரதி : (A,D வாகன அனுமதிப்பத்திரம், வயது 35 - 55)
குறிப்பு : கிராம அலுவலரின் நற்சான்றுப்பத்திரத்துடன் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.
SUNJEYS A to Z SUPER MART
இல : 100 அரசடி வீதி, யாழ்ப்பாணம். [இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்]
(C-5646)

SUNJEYS A to Z SUPER MART
யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்



100% இயந்திர மோட்டார்
பெட்ரோல் தேவையில்லை.
சூழல் மாசடையாது.
எண்ணெய் மாற்றத்தேவையில்லை.
புகை பரிசோதனை தேவையில்லை.
நம்பமுடியாத விலையில்
மாபெரும் விலைக்கழிவு
உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாக சேமிக்க முடியும்
85,000 ரூபாய் மட்டுமே
(கையிருப்பு உள்ள வரை மட்டுமே!!)

| DESCRIPTION OF BIKE | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20 AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |

#0.30/- சதம் 1 Km இயங்கும் செலவு
SUNJEYS A to Z SUPER MART
இல. 98, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
021 205 3077, 0777 474 111
(C-5645)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org